தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளிநாடு மூன்றணு. | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2 | சென்னை | 22—10—55 | சனிக்கிழமை | இதழ் 19

நினைத்து நினைத்து மகிழும் விதத்தில் நேசம் கொண்டதும் கனவோ!

ஒரு சூன்யமான நிலையில் இருந்து கொண்டு எதைப் பற்றியெல்லாமோ எண்ணுகிறேன். மாறி மாறி, வரும் நிலைகளன்...சுற்றிச் சுற்றி புறப்பட்ட இடத்திற்கே வந்தடைகிறேன், இருண்ட நிலைதான் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. எல்லையற்ற ஆசைக்கனவுகள்...

விசித்திரப் பண்புகள் கொண்ட மனித இனம் கோணல் மாணல்களையெல்லாம் தலையில் தூக்கிவைத்துக் கொண்டு ஓலமிடுகிறது. இவ்வளவிற்தும், ஊன்றி நிற்பது உளுத்துப் போன பழமையின் ஊன்றுகோலில் தான்.

அவளை நான் விரும்பினேன்.



காரைக்குடி அழகப்பா கல்லூரி மாணவர்களின் கண்டன ஊர்வலம்
—புகைப்படம் கெம்பு ஸ்டுடியோ - காரைக்குடி.

அவள் எனக்கு எண்ணங்களையும் இனிய கனவுகளையும் தந்தாள், கடைசியில் அல்லலையும் இன்னலையும் சேர்த்து வைத்ததும், அவள் தான். இன்று அவள் எங்கோ கண்காணுத தொலைவில் சென்றுவிட்டாள். நான், அவள் தந்த நினைவுக் குழியில் எண்ணங்களுடன் புதைந்து கிடக்கிறேன்.

நான் தவறு செய்தேன். பெண்ணை மலர்க் குலத்தோடு ஒப்பிட்டேன். ஆனுல், அவள் காட்டுமலரைப் போல் வெறும் வெளியில் பூத்துக் கிடக்கவில்லை. உரிமைகொண்ட ஒருவனின் பாதுகாவலில் வீழ்ந்து கிடந்தாள். எனினும் நான் அவளை விரும்பினேன். 'பாப' கரமான எனது இந்தச் செயல்......!

ஆசைகள் கள்ளமறியாத பட்டுப் பூச்சிகளைப் போன்றவை, அதன் வாலில் நூல் கட்டி விளையாடும் சமுதாய நியதிகள், சுட்டிச் சிறுவர்கள்! வாதனைகளை அறியாதவர்கள் !!

சட்டத்திற்கும் சம்பிரதாயத்திற்கும் பயந்து நான் வெறும் கனவுகளுடனேயே உலவினேன். பயங்கரமான இந்த கற்சுவர் ஒருநாள் உடைத்தெறியப்படும். அன்று......?

★

சுற்றிலும் கலகலப்பாக இருக்கிறது. மண்ணிரை கூட ஜோடியுடன் குலாவும் வசந்தகாலம். குயில் பாட மயில் ஆடும் உணர்ச்சி- மற்றவர்களுக்கு.

"...மலர்ச் சூழல் அமர்ந்தினிய
வண்டார்க்கும் காலம்
வரிக்குயில்கள் மாவில்இளந்
தளிர் கோதும் காலம்......"

எங்கும் வசந்தத்தின் இனிமைகள்-வானத்தில் வெண்தாரைகள்...பூக்காடெங்கும் புதுமணம் - தென்றல் தேக்கி வரும் இனிமைகள்...கதை பேசும் கிள்ளைகள்...எங்கும் இனிய கீதத்தில் மணஒப்பந்தப் பெருவிழாக்கள். எல்லாமே இன்புற்றுத் திரியும் காலத்தில் என் காதுகளுக்கு மட்டும் சோக இசை !

அவள் அன்னியனின் மடியில்... எனினும் அவள் என்னுடையவள்.

★

கண்ணுடியில் தெரியும் என் பிரதிபிம்பம் நோக்கி நானே அயர்ந்து போகிறேன். காற்றிலே ஒரு சோக இசை மிதந்து வருகிறது. அன்றொரு நாள், அவள் என் மடியில் குழைந்து கிடந்திருந்த போது இந்த இசை....!

மலரும் தளிரும் நிறைந்த உல்லாசமான நாட்கள், அவள் என்னிடம் வந்தாள். வாரியெடுத்து முத்தமிட்டேன். இரு கைகளிலும் அந்த முகத்தை ஏந்தி கருவிழிகளில் மிதக்கும் இரகசியங்களையெல்லாம் எண்ணி எண்ணி மகிழ்ந்தேன் கவிதையின் சுவை போதிந்த அந்த எண்ணங்கள்......

பேதையுள்ளம் எதற்காக அல்லலுறுகிறதோ? எதைக் காண வேண்டுமென்று எண்ணுகிறேனே. அதைக் காண முயாது தான்!

உள்ளம் நிறைந்த நிராசை.

★

"அனபே!"

...வண்ணமலர்கள் வாடி உதிருகின்றன. உன்னைப் பற்றிய என் கனவுகளும்.....

நிலா கருகி வருகிறது. என் இதய தாபங்களும்...

(9-ம் பக்கம்)

Best copy available.

சாதிக்குச் சாவுமணி அடித்த சாத்தன்

ம. ரா. பூபதி, M.A.

அசலன் பசுவுக்குப் பிறந்தான்; சிருங்கி மானுக்குப் பிறந்தான்: விரிஞ்சி புலிக்குப் பிறந்தான்: கேச கம்பளன் நரிக்குப் பிறந்தான்: இவர்கள் எல்லோரும் உயர்ந்த சாதிக் காரர்களுக்கு முனிவர்கள்! இந்த 'வேதாந்தப் புனைசுருட்டை' இங்கே அம்பலமேற்றுகிறார் கட்டுரையாளர்.

சாதிகள் இந்து சமயத்தில் நாற்றம் அடிக்கும் சாக்கடைகள் என்றார் இருபதாம் நூற்றாண்டுக் காந்தி அடிகள். காந்தி அடிகள் இப்படிக் கூறுவதற்கு ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னமேயே, தமிழ் நாட்டில் சாதி எதிர்ப்புப் போராட்டம் ஒன்று வியக்கத்தக்க முறையில் நடந்துள்ளது. யார் அதனை நடத்தியது? எப்படி நடத்தினார்? வெற்றி கண்டாரா?

சாதிகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டு மண்ணில் வேரூன்றி விட்டன. என்றாலும், அவற்றின் வேர்கள் தமிழ் வேர்கள் அல்ல; சாதி என்ற சொல்லையே அறியாமல், "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று எல்லோரோடும் உறவாடிக் கொண்டு, தமிழ்மக்கள் வாழ்ந்த பொற்காலம் ஒன்றுண்டு. ஆனால், நாளடைவில், வடக்கே இருந்து வாடைக் காற்று வீசியது; அந்த வாடையோடு சாதி வாடையும், வேறு வாடைகளும் கலந்து வீசின. அளவு மீறி வீசிய வாடையால் நச்சுக் காய்ச்சல் - சாதிக் காய்ச்சல் - தமிழ்மக்கள் உடலைப் பற்றிக் கொண்டது. இறுதியில் அவர்கள் உடல், உயிர், வாழ்க்கை, நாகரிகம், இலக்கியம், இலக்கணம் எல்லாவற்றையுமே விழுங்க முற்பட்டது. இந்தச் சாதிக் காய்ச்சலை உணர்ந்தோர் ஒரு சிலரே, உணர்ந்தோரிலும் அதை எதிர்த்து வீறுகொண்டு போராடியோர் மிகச் சிலர்.

சங்ககாலம் தமிழ்நாட்டின் தங்க காலம் என்று பூரிக்கிறோம். அந்தத் தங்க காலத்திலேயே சாதிக் காய்ச்சல், சாதி வெறியை உண்டாக்கி விட்டது.

"ஆயர் மகனாயின்,
ஆயமகள் நீஆயின்,
நின்வெய்யன் ஆயின்,
அவன்வெய்யை நீஆயின்,
நின்னை நோதக்கதோ
இல்லை மன்;"

இவை கலித்தொகை என்ற பழந் தமிழ் நூலில் காணப்படும் மூன்று வரிகள். இவ்வரிகள் விளக்கும் பொருள் என்ன? "உன் காதலனும் ஆயர் மகனாக இருந்து, நீயும் ஆயமகளாக இருந்து, அவனும் உன்னை விரும்பி, நீயும் அவனை விரும்பினால். உன் தாய் நொந்து கொள்ளத் தக்கதோ ஒன்றும் இல்லை;" என்பதே. ஒரு தோழி தன் தலைவியைப் பார்த்து இப்படிக் கூறுகிறாள்.

கண்மொழி பேசி, உள்ளம் உறவாடும் காதலுக்கே முதலிடம் கொடுத்த தமிழ்மக்கள், "நீ யாரோ, நான் யாரோ, செம்புலப் பெயல்நீர்போல அன்புடை நெஞ்சம் கலந்துவிட்டன. ஆகவே வாழ்வு துவங்குவோம்" என்று கூறிய ஆண்மக்களைத் தம்மிடையே பெற்றிருந்த தமிழ்மக்கள், சேர்க்கைக் கோளாறு காரணமாகத் தூய காதல் உணர்ச்சியையும், சாதி வெறிக்கு அடிபணிய வைத்து விட்டார்கள்!

மேலே காட்டிய மூன்று வரிகளில், முதல் வரி சாதிப் பொருத்தம் பார்க்கின்றது. இரண்டாவது வரியே உள்ளப் பொருத்தத்தை உணர்த்துகின்றது. ஆகவே, ஒரு பெண் ஆணை விரும்பும்போதும், ஆண், பெண்ணை விரும்பும்போதும், முதலில் சாதிப் பொருத்தம் பார்த்துக்கொண்டு அதன் பின்பே உள்ளத்தைப் பறிகொடுக்க வேண்டும் என்ற நிலைக்குத் தமிழ்ச் சமுதாயம் தாழ்ந்துவிட்டது என்று தெரிகின்றது. இந்த நிலையில், கலித்தொகைக் காலத்திலேயே, ஓர் ஆண், சோலை மயிலாக அசையும் பெண்ணொருத்தியிடம் சென்று, "நான் உன்னைக் காதலிக்க எண்ணியிருக்கிறேன். உன் சாதி என்ன என்று சாற்று; சாதிப் பொருத்தம் இருக்கின்றதா என்று பார்க்கிறேன்" என்று இத்தகைய காதல் கீதம் பாடியிருப்பானானால், நாம் வியப்பதற்கு ஒன்றும் இல்லை.

இப்படித் தமிழ்மக்களின் காதல் வாழ்க்கைக்கே உலை வைத்த சாதி வெறியை, இலக்கியத்தின்மூலம் எதிர்த்துப் போராட எவருமே முன்வரவில்லை. திருக்குறள் வகுத்த வள்ளுவர் புரட்சிவீரர்; என்றாலும், அவரும் சாதிகள் ஒழியவேண்டும், சாதிகள் வெறும் செயற்கைச் சுவர்கள் என்று வெளிப்படையாகக் கூறவில்லை. சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோ இலக்கிய உலகில் மிகப் பெரிய மாற்றங்கள் செய்துள்ளார்; பெண்ணைக்காவியத் தலைவியாக்கினார்; நாடகக் கணிகையையும் கற்பு வாழ்க்கை வாழமுடியும் என்ற அரும்பெரும் கொள்கையைத் துணிவோடு புகுத்தினார். ஆனால், அவரும் தமிழ்நாட்டை அரித்து வரும் சாதிப்பேயை எதிர்க்கத் துணியவில்லை. இவர்கள் எல்லோரும் செய்யாததை - செய்யத் துணியாததைச் - செய்துகாட்டிய பெருமை சாத்தனுக்குண்டு. அவன் படைத்த மணிமேகலைக் காவியம் சாதி வெறியை எதிர்த்தது; அதற்குச் சாவுமணியும் அடித்தது. சாதி வெறியும், சமய வெறியும் மக்கள் உள்ளங்களில், படித்த மகா புத்திசாலிகளின் உள்ளங்களில்கூட மறைவாகக் - கொழுந்துவிட்டு எரியும் இந்நாளில் மணிமேகலைக் காவியம் மறைக்கப்படுவதில் வியப்பில்லை. சாதிப்பித்து ஏறியவர்கள் ஒரு பக்கம் அதைச் சாடுகிறார்கள்; சமயக்கள்ளில் மயங்கியோர் மற்றொரு பக்கம் அதனைத் தாழ்த்துகிறார்கள். என்றாலும், மணிமேகலையின் மங்கா ஒளியைக் குன்றவைக்க இவர்களால் இயலவில்லை.

சமய வலைக்குள் சிக்கித் தடுமாறும் ஒருசிலர், பௌத்த சமயமே சிறந்த சமயம் எனக் கூறும் மணிமேகலையை இகழ்கிறார்கள்; இலக்கியத்திலே சமயப்பிரச்சாரம் செய்துவிட்டான் சாத்தன், சமயத்துக்கு இலக்கியத்தை அடிமையாக்கி விட்டான் என்று கூப்பாடு போடுகின்றனர். ஒரு கலைஞன், தன் படைப்பான இலக்கியத்தில், தன் கொள்கைகளை வற்புறுத்தக் கூடாது என்று சொல்ல எவருக்குமே உரிமை இல்லை. கம்பராமாயணத்தில் கம்பன் தன் கொள்கைகளை வற்புறுத்தவில்லையா? பெரிய புராணத்தில் சேக்கிழார் கருத்துக்கள் இல்லையா? நாயன்மார்களும், ஆழ்வார்களும் இலக்கியத்தின்மூலம் கலப்படமற்ற, அப்பட்ட சமயப் பிரச்சாரம் தானே செய்துள்ளனர்? இவர்கள் எல்லோரும் இலக்கியத்தைச் சமயத்துக்கு அடிமையாக்கி இருக்கும்போது, இலக்கிய மொந்தையில் சமயக்கள்ளை ஊற்றித் தரும்போது, சாத்தன் தன் மணிமேகலை வாயிலாகத் தன் சமயக் கருத்துக்களை வழங்கி இருப்பது மட்டும் எப்படித் தவறாகும்? இராமாயணமும் பெரியபுராணமும், தேவாரமும் பிரபந்தங்களும் இலக்கியங்கள் என்றால் மணிமேகலையும் தலைசிறந்த இலக்கியமே. முன்னவை இலக்கியங்கள் அல்ல, குப்பை மேட்டிலே குவித்து வைத்துக் கொளுத்தப்பட வேண்டிய சமயப் பிரச்சார ஏடுகள் என்றால், மணிமேகலையும் கொளுத்தப்பட வேண்டியதே; ஆனால், கடைசியாக.

ஆகவே, இலக்கியத்தைப் படைக்கும் ஆசிரியன் அதில் தன் கொள்கைகளை வலியுறுத்தக்கூடாது என்று கூறுவது முற்றிலும் தவறு. இலக்கிய அழகு கெடாத வரை, அவன் தன் இலக்கியத்தை தன் கொள்கைகளுக்காகப் பயன்படுத்தலாம். மொழி தோன்றிய நாளிலிருந்து, இன்றுவரை, உலகில் எத்தனையோ இலக்கியங்கள் மலர்ந்துள்ளன. அவற்றில் ஆசிரியனின் கொள்கைகளை வலியுறுத்தாத இலக்கியம் ஒன்றாவது உள்ளதா என்றால், இல்லை என்ற முடிவைத் தவிர வேறு எவ்வித முடிவுக்கும் வரமுடியாது. எனவே, சாத்தன் இலக்கியத்தின்மூலம் சமயப் போராட்டம் நடத்தியதும், சாதி வெறியர்களுக்குக் குழி தோண்டியதும் நேர்மையான செயல்களே.

சாத்தன் தன் காவியத்துக்கு மாதவி மகள் மணிமேகலையை இலக்கியத் தலைவியாகத் தேர்ந்தெடுத்தான். இது, அவன் சாதியின் கன்னத்தில் அறைந்த முதல் அறை. இளங்கோ கண்ணகியைக் காவியத் தலைவியாக்கிப், பெண்ணுக்குப் பெருமையளிப்பது தமிழ்நாடு என்பதை உறுதிப்படுத்தினார். என்றாலும், அவர் குலமகள் ஒருத்தியையே இலக்கியத் தலைவியாக்கினார் என்பது கருதத் தக்கது. மாதவியும் கண்ணகியும் கற்பின் இரு வேறு உருவங்கள். கண்ணகியின் கற்பு கோவிலுக்குள் குடிபுகுந்து அழிந்துவிட்டது. ஆனால் மாதவியின் கற்போ, இலக்கியத்தின் வாயிலாக மணம் வீசிக்கொண்டுள்ளது. சில சமயம், மாதவியே கண்ணகியைவிடச் சிறந்தவளாகக் காணப்படுகின்றாள். இதனை நன்றாக உணர்ந்தான் சாத்தன். பிறப்பைக் கொண்டு உயர்வு தாழ்வு காணும் பித்து, அவன் மூளையில் ஏறவில்லை. அவன் மக்களுடைய செயல்களைக் கொண்டு, வாழ்க்கை முறையைக் கொண்டு அவர்களை எடைபோட்டு மதிப்பவன். ஆகவே தான். கணிகை குலத்தில் பிறந்த மணிமேகலையைக் காவியத் தலைவியாக்கினான். கணிகையர் சாதி இழிந்த சாதி என்று அக்கால மக்கள் கருதினர். அந்த இழிந்த சாதியில் உயர்ந்த பெண் தோன்ற முடியும் என்பதை எடுத்துக்காட்டி, சாதி உயர்ச்சியின் தலையில் அடித்தான் சாத்தன்!

இப்படிக் கணிகை மகளைக் காவியத் தலைவியாக்கிக் கொண்ட சாத்தனுக்கு எவ்வளவோ இடர்ப்பாடுகள் தோன்றியிருக்கும்! இந்தக் காலத்தில், ஒருவன் சாதி ஒழிய வேண்டும்என்று சொல்லிவிட்டால், சுற்றியுள்ளோர் அவனைச் சந்தேகக் கண்களோடு நோக்குகின்றனர்; விபூதி பூசுவோர் வெறுக்கின்றனர்; நாமம் போடுவோர் நகைக்கின்றனர். அறிவு விரிந்துவிட்ட இந்தக் காலத்திலேயே இப்படி என்றால், ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன், கணிகைகுலக் கன்னியைக் காவியத் தலைவியாக்கக் கருதிய சாத்தனுக்கு, எவ்வளவு இன்னல்கள் ஏற்பட்டிருக்கும்! கன்னிக்குக் காதல் பாதை காட்டிக் களிப்பூட்ட வேண்டிய சாத்தன், அவளுக்குக் காவியுடை கொடுத்துக் கண்ணீர் சிந்த வைத்துவிட்டானே என்று சிலர் இன்று முகாரி வைக்கின்றனர். காவி உடை தந்து கண்ணியமாக அவளை வாழ வைப்பதைத் தவிர, வேறு வழியில்லை சாத்தனுக்கு. அவளை எவனுக்காவது - எடுத்துக்காட்டாகச் சோழன்மகன் உதயகுமரனுக்கு - மண முடித்து வைத்திருக்கலாம் சாத்தன். ஆனால், அவ்வாறு செய்ய அவன் வாழ்ந்த காலம் இடம் தராது. மணிமேகலை மாசில்லா மாணிக்கம் என்றாலும், மாதவியின் மகள்! கணிகை குலத்தில் பிறந்துவிட்டவள்! எவனும் அவளைக் கண்ணியமாக மணந்து கொள்ளமாட்டான்! மணிமேகலை,

"உதய குமரன்
உளங்கொண்டு ஒளித்த
மதுமலர்க் குழலாள்!"

என்றாலும், உதயகுமரன் அவளை மணந்து பட்டத்தரசியாக்க விரும்பவில்லை; வலிந்து பற்றிக் கொண்டு போய், வைப்பாட்டியாக வைத்து இன்பம் நுகரவே எண்ணினான். அவன் எண்ணம் ஈடேறி இருந்தால், 'தாசி மகள் தாசி' என்ற பரம்பரைப் பண்பை மண்தோண்டிப் புதைத்த மாதவியின் குறிக்கோளே வீணாய் விட்டிருக்கும்.

(10-ம் பக்கம்)

★ இலக்கியங்கள் எவையென்று உணரா மாந்தர் ★

★ இருட்டறையில் இடர்ப்பட்டுத் தவிக்கிறார்கள்! ★

எண்ணம்

மலர் 2 | 22—10—55 | இதழ் 19

மூலபலம் முறிகிறது !

"இந்தி திணிப்புக் கூடாது!"

"இந்தி வெறி துவேஷத்திற்கு வித்தூன்றும்!"—இந்தக் கருத்து தென்னாட்டிலுள்ள அத்தனைபேருடைய உள்ளங்களிலேயும் வேரூன்றி விட்டது. ஒரு இனத்தின் வாழ்வுக்கு அவர்களின் மொழியும், நாகரிகமும் பாதுகாக்கப்படவேண்டும் என்பதை, தங்களுடைய உயிர்ப்பிடிப்புக் கொள்கைகளில் ஒன்றாக வைத்திருக்கும் திராவிடர் இயக்கத்தலிருந்து, கண்ணாடி வீட்டை கற்கோட்டை என எண்ணி இருமாந்திருக்கும் சில்லரைக் கட்சிகள்வரை எல்லோருமே இந்தித் திணிப்பைக் கண்டித்திருக்கிறார்கள்—வன்மையாகக் கண்டித்தும் வருகிறார்கள். தூங்கிக் கொண்டிருந்தவர்கள் விழித்திருக்கிறார்கள். 'ஆளுவது யாராயிருந்தால் நமக்கென்ன? அறைவீட்டு இருப்புப் பெட்டி நிறைந்தால் போதும்' என்றிருந்த 'காரியக்காரர்'களின் உள்ளங்களைக்கூட இந்தி வெறியர்களின் அகந்தை நிறைந்த பேச்சு கிள்ளிவிட்டிருக்கிறது. நேரு பண்டிதரிலிருந்து நேற்றுமுளைத்த ராமசாமிப் படையாச்சிவரை யாரை எடுத்துக்கொண்டாலும் இந்தியைப்பற்றி ஒரு திட்டவட்டமான கருத்தை சொல்ல முடியவில்லை.

பண்டித நேருவுக்கும், அவருக்கு பக்கபலமாக இருக்கிற வல்லபபந்துக்கும் கருத்து மாறுபடுகிறது—கைலாசநாதருக்கும் வைதிக அனந்தசயனம் அய்யங்காருக்கும் கருத்து மாறுபடுகிறது. வேதப் புத்தகம் என்று 'பெருமை'படுத்தப்படும் அரசியல் சட்டத்தை உருவாக்கும் உறுப்பினர்களுக்குள்ளேயே ஒருமனதான கருத்தில்லை—இந்திபற்றிய பிரச்சினையில்! மொத்தத்தில், கட்சிப் பிரச்சினையாக இருந்த இந்தித் திணிப்பு, தென்னாட்டில், இன்று மக்கள் பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. வாதத்திற்கு வரும் எந்த ஒரு சிக்கலும், அதுபற்றி பொது மக்கள் கவலை எடுத்துக்கொள்ளும் வரை நாடு நல்ல தீர்ப்பை எதிர்பார்க்க முடியாது என்பது சர்வாதிகாரிகள்கூட ஒப்புக்கொண்ட உண்மையாகும். அத்தகைய 'இரும்புக் காதர்'களுக்குக்கூட காலம் தவறை உணர்த்தியிருக்கிறது. அந்த நிலைமைக்கு—தவறை உணரும் கட்டத்திற்கு இன்று இந்திய சர்க்கார் பொதுமக்களால் இழுத்து வரப்படுகிறது.

தான் தமிழனாக இருந்தும், சப்பரத்தை நடத்துகின்ற டில்லிச் சாரதியின் பிடிகயிறுகளில் ஒன்றாகச் சிக்கி, தென்புலத்தாரின் வாழ்வை அவர்களுக்கு அடமானம் வைத்துக்கொண்டிருக்கும் சென்னை நிதி மந்திரி சுப்ரமணியர்கூட இந்திவெறியர்களைத் தட்டிக்கேட்கிற அளவுக்கு மக்கள் குரல் உரம்பெற்றிருப்பது மகிழ்ச்சி தரக்கூடியதாகும்.

நிதிமந்திரி சுப்ரமணியம். சென்றவாரம் அண்ணாமலை பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு சொல்லாற்றுகையில், வடவர் ஏகாதிபத்தியத்தின் இந்தித் திணிப்பை பலமாகக் கண்டித்துப் பேசியிருக்கிறார். இந்தித் திணிப்பில் வடநாட்டார் வெற்றி கொள்ள நினைப்பது பகற்கனவு என்றும் எச்சரித்திருக்கிறார். நிதி அமைச்சருக்குத் தமிழின்பால் எப்போது பற்று ஏற்பட்டது? அது உண்மையான பற்றுத்தானா? என்றுகூட நாம் விந்தையுறவில்லை; ஆனால் இந்தக் கருத்தை வெளியிட நிதி அமைச்சர், எப்படித் துணிவுபெற்றார் என்பதுதான் நம்மை திகைப்பிலாழ்த்துகிறது. நான் காங்கிரஸ்காரனாக இல்லாதிருந்தால் எனக்கு மந்திரிபதவி கிடைத்திருக்காது என்று சென்ற கிழமை ஈரோட்டில் பேசிய அதே நிதியமைச்சர்தான் இந்தித் திணிப்பை கண்டித்துப் பேசியிருக்கிறார் என்ற சேதியை செய்தித் தாள்களில் படிக்கும்போது நமக்கு ஐயம் பிறக்கிறது.

யார் இந்த நிதியமைச்சர்? நமது போராட்டங்களை சட்டசபையில் கிண்டலாகப் பேசிப் பழக்கப்பட்டவர்.

யார் இந்த நிதி அமைச்சர்? ஆச்சாரியார் காலத்தில், நமது இயக்கத்தை துரோகிகளின் வார்சாக வந்துள்ள கட்சி என்று கணை தொடுத்தவர். இவரே டில்லியின் நினைப்பு பகற்கனவு என்று சொல்கிறாரென்றால் நமக்கு ஐயம் பிறப்பதில் வியப்பென்ன இருக்கமுடியும்?

சுப்ரமணியத்தின் இந்தத் 'திடீர் துணிவு'க்கு இரண்டு காரணங்கள் தட்டுப்படுகின்றன. இதுகாறும் நாட்டின் பொதுமொழிபற்றி தன்னுடைய சொந்தக் கருத்தைத் தெரிவிக்காமல் 'இமயமலை அடிவாரத்தின்' கருத்துக்கேற்ப தமது பேச்சை திருப்பிக்கொண்டு வந்தவருக்கு, திடீர் ஞானோதயம் எப்படி பிறந்திருக்கமுடியும்? பண்டித நேரு 'தென்னாட்டில் இந்தித் திணிப்பு இருக்காது' என்று அக்டோபர் 2ம் தேதியன்று சென்னையிலே மழுப்பிவிட்டுப் போனபிறகு சுப்ரமணியத்திற்கு இந்தத் துணிவு ஏற்பட்டிருக்கவேண்டும். காங்கிரஸ் மந்திரி இவ்வாறு பேசலாமா என்று கேள்வி எழுந்தாலும், தந்திருக்கிற மந்திரிபதவி பிடுங்கப்பட நேரந்தாலும், 'இதோ நேரு பேசியிருக்கிறாரே' என்று ஆதாரம் காட்ட வழிவகைகளைத் தேடிக்கொண்ட பிறகுதான் நிதி அமைச்சர் இவ்வாறு பேசத் துணிந்திருக்கவேண்டும். இது முதலாவது காரணம்.

கனம் சுப்ரமணியம் பேசியிருக்கும் இடமோ அண்ணாமலை பல்கலைக் கழகம். தென்னாட்டில் உருப்படியான கலைக்கூடமாக விளங்கும் அந்த அறிவாலயத்தில், எந்தக் கருத்துக்கு வரவேற்பிருக்கும் என்பதை அறிந்து (நன்கு தெரியும்) இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசியிருக்க வேண்டும். இது இரண்டாவது காரணம்.

நிதி அமைச்சர் எந்தக் காரணத்தைக் கொண்டு அவ்வாறு பேசியிருந்தாலும் மூலபலமே முறியத் தொடங்கிவிட்டது என்பதுமட்டும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

★ கல்லக்குடி மாகாவியம் ★

கல்லக்குடிப் போராட்டத்தில் ஆசிரியர் கண்ணதாசன் கலந்துகொண்ட கட்டத்தை காவியமாக எழுதியனுப்பும்படி நண்பர்களைக் கேட்டிருந்தோம். இளங்கவிஞர்கள் பலர் எழுதியனுப்பியிருந்தார்கள் என்றாலும் அம்மையப்பன் அன்புரையன், காமாட்சிபுரம் அமரன், வேலூர் (சேலம்) சதாசிவம்; பெங்களூர் முசிறிப் புத்தன், ஆகியோர் எழுதியனுப்பியவையே தேர்வு பெற்றன. அவைகளில், களத்து நிகழ்ச்சிகள் நிறைந்துள்ள அன்புரையானின் காவியத்தை இங்கு பிரசுரித்திருக்கிறோம்.

தானைபோம் படலம்-போர்புரி படலம்

மூன்றும் பகுதி

சோலையென நினைந்துசிறைச் சாலைநோக்கிச்
சோர்வற்று இராமசுப் பையாசெல்ல,
நாலைவ ரோடெண்மர் சென்றாரென்ற
நற்செய்தி பாடிவீ டடையவாங்கே,
காலைமுதல் வெய்துயிர்த்துக் காத்துநின்ற
காளையர்தம் தோளுயர்த்தி அணிவகுத்து,
மாலைவரு முன்னெழுந்து களமேபுக்கார்;
மண்டிற்றே, தமிழ்க்கூட்டம் தொடர்ந்துபின்னே!

களம்நின்ற இனமக்கள் கடலேயென்றால்,
கதிர்பட்டத் திரையந்தத் தொண்டர்கூட்டம்!
விளவெழுந்து கடல்மிதந்த வெண்ணிலாபோல்
வீரருக்கும் ஒருதலைவன் அங்கேவந்தான்!
உளம்வைத்துத் தேர்ந்ததனைச் செய்தேசொல்வான்;
ஊர்திரண்டு எதிர்த்தாலும் நில்லானஞ்சான்;
அளவையிலாக் கலையழகுக் கவிதைசெய்வான்;
அணிவகுத்த படைத்தலைவன் கண்ணதாசன்!

அழனத்துப் போர்ப்படைக ளார்ப்பரித்து
அன்னியர்கள் அடியெடுத்து வைத்தமண்ணைக்
கழல்நத்தா திருதயத்தைப் பிளந்துசெம்மைக்
கரம்வழிந்த (இ)ரத்தத்தால் துடைத்துமன்னன்
நிழல்வைக்கத் துடிககுந்தொல் படையேபோன்று
நின்றதடா நம்படையும் நின்றமக்கள்
அழலுமிழும் இப்படைக்கே ஆணவத்தார்
அடங்கிடுவர் என்பர்; சிலர் அடங்காரென்பர்.

களத்திலே தகராறு

(வேறு)

கண்டன ரடக்க வந்தார்! "கழகமா அனுப்பு திந்தத்
தொண்டரை? எங்கிருந்து? தொடருதே மற்றும் ஒன்று"
கொண்டிதை யடைப்போ மென்றால் கொள்ளுமோ இன்னும் வந்தால்?
விண்டனர் இன்னே யெல்லாம்; வியர்த்தனர் மேனி வெள்ளம்!

கண்ணியம் கட்டுப் பாடு கடமையென் றோதி வைத்த
திண்ணிய நெறிகள் யாவும் தேர்ந்தநம் வீரர் முன்னே
மண்ணையும் அதிர வைத்து மலையென வந்த வண்டி
விண்ணுயர் புகை யெழுப்பும்; வீரர்பண் அதையும் மூட்டும்.

பறந்தது ஆள வந்தார் படைத்தகுற் றேவற் கூட்டம்;
மறந்தது தன்னை யேநம் மக்களின் பெருத்த ஈட்டம்!
தடுத்தனர் "யாரு மிங்கே தாண்டிடக் கூடா" தென்று;
படுத்திடத் தாண்டிச் சென்றார்? பதைத்தது கண்டோர் நெஞ்சம்!

குணிலொடும் நின்றார் கொள்கை; குறிப்பொறி கொண்டார் கொள்ளை;
அணிமகன் மனமோ வெள்ளை; அவர்கரம் ஏதும் இல்லை;
பணியினோ யாதோ என்று பாய்ந்தனர், அடித்தார்! அங்கு;
துணிவொடும் நின்றதே நந் தொழுதகு தொண்டர் கூட்டம்!

பொறுத்தனர் மக்கள் ஆயின் புல்லரோ மேலும் மேலும்
ஒறுத்தனர்; அறியா மக்கள் கறுத்தனர் நெஞ்சம்; யாரோ
இறுத்தனர் என்று சில்லோர் இழந்தனர் அமைதி, உண்மை;
நிறுத்திலர் குணிலர் தாமும்; நீங்கிலர் தொண்ட ருந்தான்!

"பாரடா இந்த நாட்டின் பரம்பரை பட்ட பாட்டைக்
கூறடா நீதி எங்கே? குறையெங்கே? நேர்மை எங்கே?
ஆரடா வாளெடுப் பர், அங்கையி லொன்றிலார் முன்?
சூரரோ குறிப்பொறியை சுட்டிட எடுத்தார்; சுட்டார்!

தெறித்தது பொறியின் குண்டு; வெறித்தது மக்கள் வெள்ளம்;
பறித்தது உயிரும்; அங்கு வெடித்தது மேலும் மேலும்;
மறித்தவர் இரத்த வெள்ளம்! மாண்புள தொண்டர் மட்டும்
நெறித்திலர் நுதலை யேனும்! நின்றனர் ரனைத்து மேற்று!

நெஞ்சினைப் பிளந்த துண்டு; நீள்சிரம் துளைத்த துண்டு
துஞ்சிய வீர ருண்டு தொடுத்தபோர் பார்க்க வந்து
அஞ்சியே நின்ற மக்கள் அங்கமும் இழந்த துண்டு;
கஞ்சனக் கண்ணதாசன் தோழரைக் கவர்ந்த குண்டு!

வந்தது அங்கே நீல வாகனம்; நில்லா முன்னர்
நொந்துளர் மேனி யென்றும் நோக்கிடா தேற்றி னார்கள்!
வெந்திலர் உள்ளம் தொண்டர்; சிறைந்ததும் அதுவே யன்றோ?
சிந்திடச் செய்தார் (இ)ரத்தம், சதிசெய்தார், கைதும் செய்தார்!

கற்றநற் கலைகள் யாவும் கவிதையாற் கிளத்தும் வாயான்;
உற்றநற் கழகங் காக்கும் ஓங்கிய தென்றற் சோலை;
நற்றிறக் கண்ண தாசன் நவின்ற'அச்' சோலை போனான்!
மற்றுள யாவும் அந்த 'மாங்கனி' வாயாற் கேண்மின்!

தேர்தல்-மூன்று காட்சிகள்!

★

(பிரமுகர் சந்தானம் ஈஸிச்சேர் ஒன்றில் சாய்ந்துகொண்டு, கவுன்சிலர் பட்டியலில் தன் பெயரும் காணப்படவேண்டும் என்ற பேரவாவால் உந்தப்பட்டு, மனுச் செய்திருந்த வார்டின் வாக்காளர் பட்டியலைப் புரட்டிக் கொண்டிருக்கிறார். அப்போது நகரப் பிரமுகர் ஆதவபிள்ளை வருகிறார். சந்தானம் அவரைப் பார்த்துவிட்டு, பார்க்காதவரைப்போல வாக்காளர் பட்டியலைத் துரிதம் துரிதமாகப் புரட்டுகிறார்.)

வந்தவர் : நமஸ்காரம் சார் !...

சந் : நமஸ்காரம் ! உட்காருங்க !! எப்ப வந்தீங்க...பூனைமாதிரி வந்து...

வந்: அப்படி ஒன்னும் தப்பா நினைச்சுடாதீங்க சார்...இப்ப தான் வந்தேன் !

சந் : நல்லது... உம்... காபி சாப்பிடுங்க...

வந்: பரவா இல்லே... இப்பதான் இருபதாவது வார்டு ஏகாம்பரத்தோடு "ஹோட்டல் லோட்டஸ்"லே காபி சாப்பிட்டுட்டு நேரா இங்கே வர்ரேன.

சந் : அப்ப...

வந்: தப்பா நினைக்காதிங்க. என் 'லீன்' பாடிலே ஒரு காபி தான் கொள்ளும்...

(சிரிக்கிறார். சந்தானமும் சிரித்துக்கொண்டு)

சந் : அப்ப...நீங்க வந்த காரியம் ?

வந்: உங்கக்கிட்டே எலெக்ஷன் விஷயமா ஒரு முக்கியமான சேதியைச் சொல்லிப்புட்டு போகலாம்ன்னுதான்...என்னமோ பழகின தோஷம் ! உண்மையைச் சொல்லாமே இருக்க முடியல்லே.

சந் : பீடிகை ரொம்ப பலமா இருக்கே ! சமாச்சாரமும்...

வந்: பலமான அஸ்திவாரத்தோடல்ல வேலையை முடிச்சுட்டாரு...அதுனலே...

சந் : என்னையா பிள்ளை !...விஷயத்தை நேரடியாச் சொல்லுங்க !

வந்: சொல்றத்துக்காகத் தானே சார் வந்து இருக்கேன்... அதாவது நீங்க 17லே இல்ல போட்டி போடறது ?

சந் : ஆமாம் ! அதுக்கென்ன... ?

வந்: நம்ம இருபதாவது வார்டு ஏகாம்பரம்கூட அதிலே நாமினேஷன தாக்கல் செய்திருக்கார்ன்னு தெரியுமில்லே...

சந் : ஆமாம் !...அதுக்கு ?...

வந்: இந்த பதினேழாவது வார்டிலே மொத்தம் எண்ணூத்தி சொச்சம் ஓட்டருங்க இருக்காங்கல்ல...

சந் : ஆமாம் !

வந்: அதிலே சரிபாதி ஐயருங்க ஓட்டு...

சந் : 'லிஸ்ட்' இதோ இருக்கேய்யா...

வந்: அது இருக்கு...அந்த ஐயருங்க எல்லாம்...?

சந் : அவுங்களுக்கென்னய்யா வந்துட்டுது...நேற்றுகூட அக்ராரத்து அம்பி ஆராவமுதனைக் கண்டு சொன்னேன் ! ஓட்டெல்லாம் உங்களுக்குத் தான்னு சொன்னனே ?...

வந்: சொல்லி இருக்கலாம்... ஆனல் அக்ரஹாரம் இப்ப எப்புடி இருக்கு தெரியுமோ...

சந் : ஏன் ஏதாவது 'கிலி' பிடிச்சு இருக்கோ ?...

வந்: அதுக்கு நான் இருக்கு... ஆனல்...நம்ம ஊரு பதினேழாவது வார்டு அக்ராரத்து ஓட்டு பூராவும் மருதூர் மிராசு மகாலிங்க ஐயர் கையிலே இருக்கு.

சந் : ஊம் ? அப்படியா ?...அது எனக்குத் தெரியாமே போச்சே...ஏய்யா பிள்ளை...இப்ப நம்ம என்ன செய்யலாம் ?...

வந்: செய்யிரத்துக்கு ஒண்ணுமே இல்லே ! என்ன, ஏகாம்பரத்தோட 'லெப்டு ஹேண்டு' ஏழுமலை இருக்கானே, அவன் மருதூர் மிராசு மகாலிங்க ஐயருக்கு முதல் வருஷம் சீனியர், மறுவருஷம் கிளாஸ் மெட், இப்போ 'இண்டிமேட்'. ஆகையினலே உங்க வார்டு ஐயர் ஓட்டு பூராவும் ஏகாம்பரத்துக்குத் தான்னு நிச்சயமாயிட்டுது...

சந் : ஐயையோ !...ஐயருங்க ஓட்டைத்தானேய்யா நம்பிக்கிட்டிருந்தேன் நான்... இப்ப காலே வாரி விட்டுட்டானுங்களே... இப்ப என்ன செய்யிறது ?...

வந்: எனக்கு 'ஐடியா' ஒன்னும் தோணலே...நீங்க எதுக்கும் ஏழுமலையைப் போயி பார்க்கலாம்ன்னு நினைக்கிறேன். ஊம்... சரி... நேரமாச்சு... நான் வர்ரேன... கவனிச்சு வேலையைப் பாருங்க...

(என்று சொல்லிக் கொண்டே பதிலைக் கூட எதிர்பார்க்காமல் போய்விடுகிறார்...போனதும்)

சந் : அப்பா...நான் தேர்தல்லே ஜெயிக்கிறதுங்கிறது...ஏழுமலையான் கையிலே இருக்கு... ஊம் ?...

★

(இருபதாவது வார்டு ஏகாம்பரம் 'லிஸ்டை'ப் புரட்டிக்கொண்டிருக்கிறார். அதே ஆதவபிள்ளை வருகிறார்...)

வந்: நமஸ்காரம் பிள்ளை !

ஏகா: ஓகோ நீங்களா ! நமஸ்காரம் உட்காருங்க...காபி சாப்பிடுறீங்களா ?...

வந்: வயித்லே இடம்தான் இல்லே. என்ன...மூலைமுடுக்கெல்லாம் தேர்தல் பேச்சுப் பாருங்க...

ஏகா: சரிதான் !...என்ன சமாச்சாரம் ?...

வந்: முக்கியமான சமாச்சாரம் கொண்டாந்து இருக்கேன். நீங்க பதினேழுலேயும் போட்டிப் போடுறீங்கல்லே...

ஏகா: ஆமாம் !...

வந்: உங்களை பலமா எதிர்க்கிறத்துக்கு பணபலம் உள்ள அந்த சந்தானகிருஷ்ண நாயுடு ஒருத்தர்தானே இருக்காரு...

ஏகா: ஆமாம்...

வந்: அதோட 'பதினேழுலே'--ஐயருங்க ஓட்டுதான் ஜாஸ்தின்னு இந்த 'லிஸ்ட்' சொல்லுமே.

ஏகா: ஆமாம் ! அக்ரஹாரத்துலே முக்கியமான நாலு 'புள்ளி'ங்க நமக்கு ரொம்ப வேண்டியவுங்க...அந்த நாலு பேருக்குமே அக்ரஹாரம் மரியாதை கொடுக்கும்...ஆகையினலே...

வந்: இங்கே தான் பிள்ளை நீங்க ஏமாந்து போறீங்க...என்ன இது 'எலெக்ஷன்' விஷயம் பாருங்க... கடைசிவரைக்கும் எதையுமே நம்பமுடியாது.

ஏகா: நீங்க என்ன சொல்றீங்க...

வந்: ரகசியமான சேதி... நீங்க நம்மகிட்டே பழகின தோஷத்துக்கு சொல்லாமே இருக்க மனசு வரல்லே...எனக்கு லேசாத் தெரிஞ்ச விஷயத்தையும் காதிலே போட்டு வைக்கலாம்ணு வந்தேன்.

ஏகா: அப்படி என்ன சேதி...ஊம்?

வந்: (எழுந்து கொண்டே) உங்க மனசுக்குள்ளேயே இருக்கட்டும். இந்த லிஸ்ட்டிலே இருக்கிற அக்ரஹாரத்து ஓட்டுப் பூராவும்...மருதூர் பண்ணை மகாலிங்க ஐயரோட உள்ளங்கையிலே அடக்கம்...அவுரு கிழிச்ச கோட்டை இந்த அக்ரஹாரம் தாண்டாது... ஆனல்... அந்த சந்தானகிருஷ்ணன் இருக்கானே...அவனோட ஒரு 'டிப்டாப்' ஒன்று சுத்திக்கிட்டு இருக்குப் பாருங்க...அவன் தாங்க... ஏழுமலை. ஏழுமலை...அவனுக்கு மருதூர் மிராஸ் மகாலிங்க ஐயர் ரொம்ப 'குலோஸ்' பிரண்டு. ரெண்டு பேரும் ஒரேபள்ளிக்கூடத்திலே ஒரே கிளாஸ்லே படிச்சவுங்களாம்...இன்னும் விவரமா சொன்ன ஒரே பாயிலேகூட படுத்துக்குவாங்களாம்... ஆகையினலே...அக்ரஹாரத்து ஓட்டுப் பூராவும் சந்தானகிருஷ்ணனுக்குத் தாங்கிறது தீர்மானமாயிட்டுது... எதுக்கும் நீங்க... ஜாக்ரதையா வேலை செய்யிறதுதான் நல்லது. நான்கூட கேள்விப்பட்டேன் ஏழுமலை கொஞ்சம் 'ப'ணம்ன பல்லைக் காட்டுவான்னு...சரி. நான் வர்ரேன். வரட்டுமா. (போய்விடுகிறார்)

ஏகா: சரி...சரி...(பெருமூச்சு ஒன்று விட்டு) நான் ஜெயிக்கிறதுக்கு 'ஏழுமலை தயவு' பூரணமா வேணும்போல இருக்கு... (என்று எழுகிறார்)

★

(ஏழுமலை, சலவை செய்யப்பட்டு வந்த சட்டை ஒன்றைப் போட்டுக்கொண்டு, வாய் நிறைய வெற்றிலைப்பாக்கைப் போட்டுக் குழப்பியவாறு ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடிக்கொண்டிருக்கிறார்... அங்கே...முன்பு சந்தித்தவர் வந்துகொண்டே...)

வந்: புல் சக்ஸஸ் ஏழுமலை...நம்ப ப்ளான் நெயண்ட்டி பெர்செண்ட் சக்ஸஸ்தான் போ...

ஏழு: அப்புடியா !... ரெண்டுபேரும் என்ன சொன்னுங்க...

வந்: சொல்றதென்ன ! இன்னைக் கேப் பாரேன் ! ரெண்டுபேரும் உங்காலிலே வந்து விழப் போராங்க.

ஏழு: நிச்சயமாவா ?

வந்: நம்ம போட்ட 'ப்ளான்' எதிலே 'பெயிலியர்' ஆகி இருக்கு?

ஏழு: அப்போ...

வந்: இவங்கிட்டே ஐயாயிரம் அவங்கிட்டே ஐயாயிரம் நிச்சயமா எதிர்பார்க்கலாம்...

ஏழு: ஓஹோ !

வந்: அதோடயாப் போச்சு...நம்ம கந்தன்--சுப்பன் -- முருகன் -- குருநாதன் இவன்ங்கக்கிட்டே கையிலே பத்துப் பத்து ரூபாயைக் கொடுத்தேன்...

ஏழு: எதுக்கு ?

வந்: கேளுப்பா... ஆளுக்கு ஒரு வேஷ்டி, சட்டை புதுசாத் தச்சிப் போட்டுகிட்டுவரச் சொல்லி-நம்பப் பிளானையும் சொல்லி-அந்த ரெண்டுபேருகிட்டேயும் அனுப்பியிருக்கேன்... அவன்ங்க வேற போயி திரிக்கிற கயிறிலே ஆளுங்க கதறிக்கிட்டு இங்கேஓடியாற வேண்டாம் !...

ஏழு: சபாஷ் ! சபாஷ்... (என்று 'அவர்' முதுகைத் தட்டிக்கொடுக்கிறன் ஏழுமலை)

வந்: அது சரி... ரொக்கம், குறைஞ்சது பத்தாயிரம் ரூபாயாவது புரளும்... ஆளுக்குப் பாதி... என்ன சரிதானே...

ஏழு: சரிபாதியா...

வந்: ஊம் ?...

ஏழு: சரி. சரி... அது சரி... அப்புறம் நம்ம குட்டு வெளிப்பட்டுப் போயிட்டா ?

வந்: அட நீ ஒன்னுப்பா...அடுத்த 'எலெக்ஷன்' வர்ரவரைக்கும் இந்த ஊருல்லே எதுக்கு தலைகாட்டனுமாம்... அப்படியே தலைகாட்டினலும் இவுரு 'கேஸ்' போட்டு நம்பளை உள்ளே தள்ளிவுட்டுட முடியாது பாரு...

(என்று இருவரும் சிரிக்கிறார்கள்.)

—முத்துராமன்.

தமிழ்நாட்டில் பெரும்பகுதி இடங்களில் நகரசபைத் தேர்தல்கள் முடிந்துவிட்டன. அங்கெல்லாம், ஆதிக்க பலம் கொண்டோர், தங்களின் வெற்றிக்காக கையாண்ட சாதுர்யங்களில் ஒன்றை இத்த ஒற்றை அங்க நாடகத்தின்மூலம் படம் பிடித்துக் காட்டுகிறார் இதன் ஆசிரியர்.

அடுத்த இதழில்

"நாடறிந்த பூமாலை"

?

வாழ்வது எப்படியோ ?

தென்னாட்டைக் காலடியிலே போட்டுக்கொண்டு, 'ஏக இந்தியா' என்ற ஏமாற்றுச் சொல்லின் பெயரால் வடநாடு மட்டும் எவ்வாறு பணத்தோட்டமாக்கப்பட்டு வருகிறது என்பதற்கு, அங்கே நிறுவப்பட்டுள்ள பாங்கிகள், இன்சூரன்ஸ் கம்பெனிகள். ஆலைகள், இவைகளைச் சான்று காட்டினார். இப்போது உற்பத்தித் தொழிற்சாலைகள் பற்றி ஆராய்கிறார் சொற்செல்வர்.........

ஈ.வே.கி.சம்பத்

★

(11)

பெயர்.	மூலதனம்.	நடத்தும் தொழில்.
52 ஸ்டீல் ப்ராடக்ட்ஸ்.	5,80,000	எஃகு பர்னிச்சர், தந்தி இலாகா இரயில்வே சாதனங்கள்.
53 சுப்ரீம் இண்டஸ்ட்ரீஸ்.	10,84,100	குழந்தை சைகிள்கள், சைகிள் துணைக்கருவிகள், ரப்பர் கருவிகள், பிளாஸ்டிக் சாமான்கள், குழந்தை மோட்டார்கள் உற்பத்தி
54 டெக்ஸ்டைல் மெஷினரி கார்ப்பரேஷன்,	1,00,00,000	பஞ்சாலை இயந்திரங்கள் உற்பத்தி.

தென்னாட்டிலுள்ள இஞ்சினீயரிங் தொழிற்சாலைகள்

பெயர்.	மூலதனம்.	நடத்தும் தொழில்.
1 T. I சைகிள்ஸ் ஆப் இண்டியா.	60,93,400	"ஹெர்குலஸ் இண்டியா" சைகிள் உற்பத்தி.
2 டெக்ஸ்டூல் கம்பெனி.	6,00 000	பஞ்சாலை இயந்திர சாதனங்கள், தையல் மிஷின்கள், ஆயில் எஞ்சின்கள் உற்பத்தி.
3 ஸ்டோன்வேர் பைப்ஸ்.	5,53,900	சேனிடரி பிட்டிங்ஸ், பெரும் சாக்கடைக் குழாய்கள் தயாரிப்பு
4 ஸ்டேண்டர்டு மோட்டார் ப்ராடக்ட்ஸ்.	23,12,645	ஸ்டேண்டர்டு வான்கார்டு மோட்டார் வண்டிகள் பொருத்துதல்.
5 பிராகா டூல்ஸ் கார்ப்பரேஷன்.	69,80,975	வெட்டும் சாதனங்கள், (Milling Cutters, Reamers) குழாய் முனைகள், அளவை கருவிகள், லேத்துகள், டிரில்கள், வைஸஸ், இரயில்வே இயந்திர சாதனங்கள்.
6 மைசூர் ஸ்டோன்வேர் பைப்ஸ் & பாட்டரீஸ்.	6.00,000	சேனிடரி சூயர் பைப்கள், தரை, கூரைஓடுகள் முதலியவை.
7 மைசூர் மெஷினரி.	8,95,180	அயர்ன் அண்டு பிராஸ் பவுண்டர்ஸ், இயந்திரப் பொறியியல், விவசாயச் சாதனங்கள், தறி சாதனங்கள் ஆகியவை உற்பத்தி.
8 மைசூர் கிரிலோஸ்கர்.	21,42,900	நுணுக்கமான இயந்திரக் கருவிகள்; வடநாட்டு கிரிலோஸ்கர் பிரதர்ஸ்ஸாரின் நிர்வாக ஆதிக்கத்தில் நடைபெறுகிறது.
9 மெடல் இண்டஸ்ட்ரீஸ்.	3.35 075	கூரான ஆயுதங்கள், சாதனங்கள், விவசாயக் கருவிகள் உற்பத்தி.
10 ஹைதராபாத் கன்ஸ்ட்ரக்ஷன் Co.	s.45,91,800	பொது பொறியியல்.
11 பிரண்டன அண்டு கோ.	11,25,000	பொது பொறியியல், படகு கட்டுதல் ஆகியவை.
12 அஷோக் மோட்டார்ஸ்.	54,56,500	மோட்டார் கார்கள், ட்ரக்குகள், பஸ்கள் கட்டுதல். பெரிதும் வடவர்கள் ஆதிக்கம், மூலதனம்.
13 இண்டியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ்.	13,82,732	ரவுண்டுகள், தகடுகள், சதுரங்கள் முதலியவை. டாடாவின் நிர்வாக ஆதிக்கத்துக்குட்பட்டது.

நூல்நயம்

பெஞ்சமின் பிராங்ளின்

ஒவ்வொரு நாட்டிலும், சமுதாய முன்னேற்றத்தை நாடி, அதற்காகப் பணி புரிய சிந்தனையாளர்கள் தோன்றி வந்திருக்கின்றனர். மக்கள் வாழ்வே தங்கள் வாழ்வு எனக் கருதுபவர்கள் அவர்கள். பலபலத் துறைகளிலும், அவர்கள் மக்களுக்குத் தொண்டு செய்வதையே தங்கள் கடமையாகக் கொண்டு வாழ்ந்தனர்—வாழ்கின்றனர். அத்தகைய சிந்தனையாளர் பட்டியலிலே தனி இடம் வகிக்கிறார் அமெரிக்க ஐக்கிய நாட்டிலே தோன்றிய பெஞ்சமின் பிராங்ளின். அவரது வரலாறும் சிந்தனையும், முன்னேற்றத்தைத் தேடி அலையும் மனித குலத்திற்கு நிச்சயமாகப் பயன் படத்தான் செய்யும். அவரது வரலாற்றை மார்கரெட் கசின்ஸ் என்னும் அமெரிக்க நூலாசிரியை எழுதி யிருக்கிறார் அதை, சுவை சிறிதும் குன்றாமல், ஆசிரியர் அரு. ராமநாதன் அவர்கள் மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார். ஆசிரியர், தமிழகத்திலே இன்றுள்ள விரல் விட்டு எண்ணப்படக் கூடிய சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர். வர்ணனைகளை நிறைக்காமல் எடுத்துக் கொண்ட பொருளை ஆணித்தரமாகவும் படிப்போர் மனதில் பதியும் படியும் எழுதுவதில் வல்லவர் என்பதை இந்நூல் தெளிவாக்குகிறது.

மிகவும் பயனுள்ள நூல். இரண்டாம் பகுதியில் உள்ள 'பிராங்ளின் சிந்தனைகள்' மனித இனத்திற்கு மிகவும் பயன்படும்.

விலை ரூ 1-4-0

வெளியீடு: பிரேமா பிரசுரம்
சென்னை 24

◉

ரேடியோ நாடகம் எழுதுவது எப்படி ?

தமிழ் நாட்டில் எவ்வளவோ பேர் தமிழ் நாடகம் எழுதுகிறார்கள். ஆனால் யாவரும் வெற்றி பெறுகிறார்களா என்றால், இல்லை. அண்மையில் வானொலிக்காரர்கள் நடத்திய ரேடியோ நாடகப்போட்டி அதைத்தான் விளக்கியது. ஒரு நாடகம் கூடப் பரிசுக்குகந்ததாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. (தென்றல் நடத்திய 'இலக்கியப் போட்டியில்' நாடகப் பிரிவில்-ஒரு நாடகம் கூட பரிசு பெறவில்லை என்பது கவனிக்கத் தக்கது) ரேடியோ நாடகம் எழுதுவது எப்படி என்பதையும், நாடகம் எழுதுவது எப்படி என்பதையும் பலர் புரிந்துகொள்ளவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது.

இந்நூலில். ஆசிரியர் பி. எஸ், ராமையா ரேடியோ நாடகத்தை எப்படி எழுதுவது என்பதை விளக்கிக் காட்டி யிருக்கிறார். ஆசிரியர் பல ரேடியோ நாடகங்கள் எழுதி அனுபவமானவர் ஆதலாலும், மேல் நாடு சென்று ஆங்கில நாடகங்கள் பலவற்றை நன்கு கவனித்து அறிந்து கொண்டதாலும், புதிய நாடகம் எழுதுவோருக்கும் விளங்குமாறு செய்திருக்கிறார். இந் நூலில் உள்ள 'பாயின்ட்ஸ் மேன செல்ல முத்து' என்ற நாடகம் வேடிக்கைச் சுவை நிரம்பியதாக உள்ளது. படித்துப் பயன் பெறலாம்.

விலை ரூ. 1-8-0

வெளியீடு : பிரேமா பிரசுரம்
சென்னை 24

◉

காவியம்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் நடத்திய குயில் பத்திரிகைக்குப் பின்னர் எவரும் அது போன்ற கவிதை இதழை வெளியிட முன் வரவில்லை. இப்போது அவரது நேர்வழியினரான கவிஞர் சுரதா அவர்கள் 'காவியம்' என்ற கவிதை வார இதழைத் தொடங்கியிருக்கிறார். சுரதா அவர்களின் கவிதை ஒவ்வொன்றும் சுவையாக இருக்கிறது. 'அம்பிகை' அப்பெயர் வந்த வரலாற்றை அவர் சொல்வது அழகாக இருக்கிறது. 'காவிரி' நதியைப் பற்றிய இசைப் பாட்டு நம் கருத்தைக் கவர்கிறது.

புகைப்படம் ஒன்றை வெளியிட்டு, அதற்கு நேயர்களைக் கவிதை எழுதச் சொல்லி, அதனை வெளியிடுவது புதிய முறை மட்டுமல்ல, பாராட்டத் தகுந்ததுமாகும். கவிதை எழுத விரும்புவோர்கள், காவியத்தைப் படித்துக் கற்றுக் கொள்ளலாம்.

தனி இதழ் விலை அணா 0-1-0

கிடைக்குமிடம் :

அருணாசல ஆச்சாரி தெரு
சென்னை 7

◉

நன்றி

◉

எனது மகன் நாகப்பன் 25-9-55 அன்று இயற்கை எய்தியமை குறித்து எனக்கு ஆறுதல் கடிதங்கள் எழுதிய நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

V. E. N. வீரவன்

இன்னெரு அழகி; அவளும் பாண்டிய நாட்டுப் பாவைதான். தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டே இருக்கிருள். என்னன்னவோ எண்ணங்கள்! மதுரையார் கோமான் பாண்டியனை மனதுக்குள்ளிருத்தியதால் அந்தப் பாரம் அவளைத் தூக்கமில்லாமல் செய்துவிட்டது. பாண்டியன் பக்கத்தில் வருவது போலவும், அருகிலே அமர்வது போலவும், கூந்தலைக் கோதிக் கொடுப்பது போலவும், நெற்றியைத் தொட்டு முத்தமிடுவது போலவும், "நான் முத்தமிட்ட நெற்றி கூனற் பிறைபோ, கொலைவாளின் மேற்பரப்போ" என்று வர்ணிப்பது போலவும், தன் கன்னத்திலே முகம் பார்ப்பது போலவும், அது போதாதென்று முத்தமும் இடுவது போலவும், செம்பவள இதழை முத்தமிட்டு முத்தமிட்டுக் கரைத்து விடுவது போலவும் எண்ணி எண்ணிப் புரண்டு புரண்டு படுக்கிருள், அந்தக் கற்பனை உணர்ச்சியிலேயே பாதி இன்பத்தை அனுபவித்து விடுகிருள். தலையணையைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு அதைப் பாண்டியனுக எண்ணி மேனி முழுவதையும் கொண்டு அதை மூடிக் கொள்கிருள். இவ்வளவு உணர்ச்சி வயப்பட்ட அந்தக் கோதை, கடைசியில் களைத்து, ஏதோ முதலிரவில் அனுபவித்துக் களைத்தவள் போல உறங்குகிருள். விழித்திருக்கும் போது மனதிலே நின்ற பாண்டிய மன்னன் தூங்கும் போது மறைந்து தொலைத்தானு? கனவிலும் வந்து விடுகிருன். வந்து வண்ணப் பொற் சித்திரத்தை-வைகைக் கரைப் பாவையை கண்பொத்தி விளையாடுகிருன். மதுரையில் ஓடும் நதியின் பேரே வைகையல்லவா! ஆகவே 'வை'-கை' என்று தன் கையில் அவன் கையை வைத்துக் கொள்கிருன். கனவு முழு உருவத்தோடு தோன்றியதால் அவன உண்மையிலேயே வந்து விட்டதாகக் கருதி அந்தப் பரிதாபத்திற்குரியவள் கண்களைத் திறந்து விடுகிருள். "ஐயகோ! மன்னவனே, மதுரை மாயவனைக் காணவில்லை! கூடற் பெருமானைக் கூடலார் கோமானே" என்று கூவுகிருள். "குருதிவேல் மாறனே, குளிர் காந்தம் பூசிய உன்மார்பகலம் எங்கே? என்று மயங்குகிருள். "மணியானை மாறனே, நீ வடித்த முத்தம் எங்கே?" என்று தியங்குகிருள். "ஆரத்தால் தீ மூட்டும் அம்பொதியின் கோமானே, சேரத்தான் வந்தாயே திரும்பி எங்கே போனுய்?" என்று திகைக்கிருள்-தேடுகிருள். கனியானைத் தென்னன் கனவில் வந்ததைக் கை நழுவ விட்டு விட்டோமே என்று கலங்குகிருள். அவள் போட்ட சப்தத்தைக் கேட்டு அவளது தோழி எழுந்து வருகிருள். கைவளை கழன்று காரிகை சோர்ந்து கிடப்பதைக் காணுகிருள் என்ன நடந்தது என்று வினவுகிருள்.

"அடி தோழீ! கனவிலே மதுரை மன்னன் வந்தான். என் கையைப் பற்றினுன் பருவம் வந்தது முதல் அழைத்தானேடி நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்? அவன் என கையைப் பற்றியதும் நேரிலேயே வந்து விட்டதாக எண்ணி விழித்தேன்! ஐயோ! அவனைக் காணவில்லை. இப்போது அந்த இன்பக் கனவையும் இழந்து திகைக்கிறேனடி. அந்தக் கனவாவது மீண்டும் வருமா?" என்று கலங்கி உரைக்கிருள் தலைவி. இந்த மனோதத்துவப் படப்பிடிப்பு, முத்தொள்ளாயிரத்தில் காணப்படுவது. காதலைப் பற்றி எழுதியவர்கள் பலரும் காதலுக்கு இலக்கணம் வடித்துக் கொடுத்திருக்கிருர்கள் என்ருலும், அனுபவத்திற்கு ஒத்துவரக் கூடிய இயற்கை நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது முத்தொள்ளாயிரம். கற்பனைக்கும் அப்பாற்பட்ட காம வெறியைச் சித்தரிக்கும் கம்பனின் இராம காதையைப் படித்துவிட்டு முத்தொள்ளாயிரத்திற்கு வருவோமானுல் தமிழர் பண்பாட்டின் பெருஞ் சிறப்பு எங்கே இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

அந்த முத்தொள்ளாயிரப்பாடல் இது:—

ஓராற்ருன் என் கண் இமை
பொருந்த அந்நிலையே
கூரார்வேல் மாறன்என்
கைப்பற்ற—வாரா
நனவென் றெழுந்திருந்தேன்
நல்வினையொன் றில்லேன்
கனவும் இழந்திருந்த வாறு

— 39 —

★

புரட்சிக் கவிஞர்
பாரதிதாசன் எம். எல். ஏ.
எழுதும்
திருக்குறள் புது உரை
தேன் துளிகள்
5-11-55ம் தேதிய இதழில்
ஆரம்பமாகிறது!

தனித்திருக்கும் காதலி நெஞ்சைப் பார்த்துக் கெஞ்சுவாள். இதயத்தோடு பேசுவாள்.

"நெஞ்சே! காதலால் வளர்ந்த இத்துன்ப நோயைத் தீர்க்கும் மருந்து ஏதாவதுஒன்றை, நீ நினைத்துப் பார்த்து எனக்குச் சொல்ல மாட்டாயோ?'

"என் நெஞ்சமே! வாழ்க! அவர் நம்மிடம் காதல் இல்லாதவராயிருக்க, நீ மட்டும் அவரை நினைந்து வருந்துவது உன் அறியாமையே!"

"நெஞ்சே! என்னுடன் இருந்து அவரை நினைந்து வருந்துவது ஏன்? இந்தத் துன்ப நோயை உண்டாக்கியவரிடம் இவ்வாறு அன்புகொண்டு நினைக்கும் தன்மை இல்லையே!"

"நெஞ்சே! நீ அவரிடம் செல்லும்போது என் கண்களையும் உடன் கொண்டு செல்வாயாக! அவரைக் காண வேண்டும் என்று இவை என்னைப் பிடுங்கித் தின்கின்றன."

"நெஞ்சே! யாம் விரும்பி நாடினுலும் எமமை நாடாத அவர். நம்மை வெறுத்து விட்டார் என்று எண்ணிக் கைவிட முடியுமோ?"

"என் நெஞ்சே ஊடியபோதுகூடி ஊடல் உணர்த்தவல்ல காதலரைக் கண்ட போது நீ பிணங்கி உணர மாட்டாய்? பொய்யான சினங் கொண்டு காண்கின்ருய்!"

"நல்ல நெஞ்சே! ஒன்று, காமத்தை விட்டு விடு; அல்லது நாணத்தை விட்டு விடு; இந்த இரண்டையும் பொறுத்துக்கொண்டிருக்க என்னுல் முடியாது."

"என் நெஞ்சே! பிரிவுத் துன்பத்தால் வருந்தி அவர் வந்து அன்பு செய்யவில்லையே என்று ஏங்கிப், பிரிந்தவரின் பின் செல்கின்ருய்? நீ பேதை."

"என் நெஞ்சே! காதலர் உன் உள்ளத்தில் உள்ளவராக இருக்கும்போது, நீ அவரை நினைத்து யாரிடம் தேடிச் செல்கின்ருய்?"

"நம்மோடு பொருந்தி யிருக்காமல் கைவிட்டுச் சென்ற காதலரை நெஞ்சில் வைத்திருக்கும்போதும், இன்னும் மெலிந்து அழகை இழந்து வருந்துகின்ருேம்"

— என்றெல்லாம் பிரிவுத் துன்பம் தாளாது நெஞ்சோடு கிளத்துகிருள் வள்ளுவனின் மூன்ரும் பால் தலைவி.

பிரிவுக்கும் நெஞ்சுக்கும் உறவு காட்டுவதுதான பண்பான தலைவியரைப் படைக்கும் பண்பான கவிஞர்களின் செயல்.

ஆனுல், கம்பனரின் தலைவி சீதா பிராட்டி நெஞ்சொடு கிளத்தவில்லை. சேச்சே! அதென்ன, சாதாரணம்! ஆண்டவன் பத்தினி, வெறும் நெஞ்சோடு மட்டும் பேசிக் கொண்டிருந்தால் போதுமா? கொங்கையொடு கிளத்துகிருள்! தன் கொங்கைகளைக் குனிந்து பார்த்துப் பார்த்துப் பேசுகிருள்! "அட என் கொங்கைகளே! நீங்கள் என் சொம்பாக இருந்து குடமாக வளர்ந்து குன்ருக மலர்ந்து இப்போது கோடாகவே (மலையாக) ஆகிக்கொண்டு போகிறீர்கள்! (இமயமலையிலே கொடி நாட்டியவர்கள் இந்த இரண்டு மலைகளையும் கண்டால் புலிக கொடி, மீன கொடி பொறித்து வைத்துவிட்டுப் போய் விடுவார்களே!) நீங்கள் இப்படிப் பருத்துக் கொண்டே போவதிலே என்ன லாபம்? உங்கள் தினவைத் தீர்த்து வைக்கிற ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி இன்னும் என் அருகில் வரவில்லையே! அவரது திருமார்பகலத்தில் அழுந்தி அப்புறம் உருவிக் கொண்டு வரக் கூடிய காரியத்தைச் செய்ய வேண்டிய நீங்கள், அர்த்தமில்லாமல் வளர்ந்து கொண்டே போகிறீர்களே! (இப்படி நீங்கள் வளர்ந்து கொண்டே போனுல், பிறகு ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி உங்கள் சிகரத்தைக் கண்டுபிடிக்க வெகு சிரமப்படுவாரே!) தயவு செய்து உங்கள் வளர்ச்சியை நிறுத்தி, ஸ்ரீ ராமபிரானை அடைவதற்கு ஏதாவது தவம் செய்ய முடியுமானுல் செய்யுங்கள்! அதற்கான வழி வகைகளைத் தேடுங்கள்!" என்று 'கொங்கையோடு கிளத்'துகிருள், ஆரிய பத்தினி! இப்படிப்பட்ட கற்பனை, வேறு தமிழ்க் காப்பியங்களில் துருவித் துருவி ஆராய்ந்தாலும் கிடைக்காது. எழுதியவன் கம்பன், எடுத்துக்கொண்ட பொருள் சீதையின் கொங்கை! வேறு யாரால் முடியும்கம்பனைத் தவிர? வானத்தை முட்டும் அவ்வளவு பெரிய கொங்கை வேறு யாருக்கு வாய்க்கும், சீதையைத் தவிர?

வள்ளுவனின் தலைவி.........? சேச்சே, அவள் தான், "நாணுக்கால் பெண்மை நலனழியும்" என்பதை உணர்ந்த மரியாதையான பத்தினியாயிற்றே!

கம்பனரின் கைவண்ணம் இது:

"இளைக்கலாத கொங்கைகாள்! எழுந்துவிம்மி என் செய்தீர்!
முளைக்கலா மதிக்கொழுந்து போலும் வாண்முகத்தினுன்
வளைக்கலாத விற்கையாளி வள்ளன் மார்பினுள்ளுறத்
திளைக்கலாகு மாகிலான செய்தவங்கள் செய்ம்மினே!"

— கார்முக. ப. 50 —

— கண்ணதாசன் —

வேலங்குடித் திருவிழா

அகிலன்

சுந்தரமும் மற்றவர்களும் இறங்கி ஓடியதை கவனித்த பாலன் தானும் கீழே இறங்கிச் சென்றான். சுந்தரம் மற்றவர்களிடம் '' தூக்குங்க, தூக்குங்க, ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவோம் '' என்றான். எல்லாரும் அந்தப் பெண்ணைத் தூக்கினார்கள். பாலன் அந்தப் பெண்ணின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். மின்சாரம் பாய்ந்தது போன்ற அதிர்ச்சி. அவன் மேனி ஆடி ஓய்ந்தது. தலையில் பலமான அடி விழுந்ததுபோல் ஒரு வார்த்தைகூடப் பேச முடியாமல் அந்தப் பெண்ணைத் தூக்குவதில் ஒத்தாசை புரிந்தான். அந்தப் பெண்ணைக் காரில் ஏற்றி படுக்க வைத்தவாறு எல்லோரும் வீடு வந்து சேர்ந்தார்கள்.

வீட்டிற்கு வந்ததும் சொக்கப்பர் 'விடுவிடு' என்று ஓடி ஒரு பாயைக் கொண்டுவந்து திண்ணையில் விரித்தார். அந்தப் பெண்ணை அதில் படுக்க வைத்தார்கள். வெகுநேரம் வரை தன் நினைவு இல்லாமலேயே அவள் கிடந்தாள். சுந்தரம் அவளுக்குப் பக்கத்தில் நின்றவாறு மூச்சு வருகிறதா என்று அடிக்கடி கவனித்துக்கொண்டிருந்தான். பாலன் நிம்மதியில்லாமல் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தான். வெகுநேரத்திற்குப் பிறகு அந்தப் பெண் கண்விழித்தாள். மூர்ச்சை தெளிந்ததும், யாருமே வழக்கமாகக் கெட்கிற, '' நான் எங்கே இருக்கிறேன்?'' என்னும் கேள்வியையே அந்தப் பெண்ணும் கேட்டாள். சுந்தரம், அவள் கண்விழித்த மகிழ்ச்சியில், மிகவும் பழக்கப்பட்டவன் போல,''இங்குதான்'' என்றான்! ''இங்குதான் என்றால் இது என்ன இடம்!''-பேந்தப் பேந்த விழித்தவாறு அந்தப் பெண் கேட்ட அடுத்த கேள்வி இது.

'' இது மேலைச்சிவபுரி! சொக்கப்ப பிள்ளை வீடு. அம்மா, நீ வழியில் காரின்முன் வந்து விழுந்தாய். அதிர்ச்சியோடு தப்பித்துக் கொண்டாய்.....''-சுந்தரம் மேலும் தொடரவிருந்தான்.

4

அதற்குள் அந்தப் பெண் இடைமறித்து, ''அப்படியானால் நான் இன்னும் சாகவில்லையா?'' என்று கேட்டாள். '' இதென்னம்மா கேள்வி!'' என்று சொல்ல வந்த சுந்தரம், ''இல்லை. நீ உயிருடன்தான் இருக்கிறாய்!'' என்று, 'உள்ளதை உள்ளபடி' சொல்லி வைத்தான். உடனே அந்தப் பெண்ணின் முகம் விகாரமடைந்தது. ''ஓ!'' என்று



அழ ஆரம்பித்தாள். பாலன் அந்தப் பக்கம் தலையே காட்டவில்லை. இந்திரா ஒரு கோப்பையில் காபி கொண்டுவந்து அந்தப் பெண்ணிடம் கொடுத்தாள்.

'' எனக்குக் காப்பி வேண்டாம்! விஷம் கொடுங்கள்! விஷம் கொடுங்கள்!''-என்று கோப்பையைத் தள்ளியபடியே கத்தினாள், அந்தப் பெண். மீனாட்சியும் மங்கையர்க்கரசியும் அவளுக்கு எவ்வளவோ சமாதானம் சொன்னார்கள். கடைசியில் தலையணையில் முகத்தைப் புதைத்தவாறு அழுதுகொண்டிருந்த அவளை, கமலம்தான் ஆறவைத்தாள். வீங்கியிருந்த கண்கள் பெய்துகொண்டிருந்த கண்ணீர் மழையைத் துடைத்துக்கொண்டு, சூடானகாப்பியை வயிற்றுக்குள் செலுத்திக்கொண்டதன்மூலம் இதயச் சூட்டைத் தணித்துக்கொண்டாள் அந்தப் பெண்.

பாலன், தோட்டப்புறத்திலேயே சுற்றிக்கொண்டிருந்தான். நன்றாக இருட்டிவிட்டது. அப்போதும் அவன் வீடு திரும்ப விரும்பவில்லை.

'' இவள் எப்படி இங்கு வந்தாள்? அட பரிதாபத்திற்குரியவளே!......''-பாலனின் மனம் பல கதைகளைப் பின்னிக்கொண்டது. அடிக்கடி ஒரு வேதனையான எண்ணம் அவன் இதயத்தைத் தொட்டுத் தொட்டுப் போய்க்கொண்டிருந்தது. நடந்த விபத்திலிருந்து அவன் மனம் பல கற்பனைகளை அடுக்கிக்கொண்டு அவற்றின் உச்சியில் ஏறி நின்று திணறிற்று. இந்திராவுக்கு, அவள் அனைத்தையும் சொல்வதுபோலவும், அவள் அதைக் கேட்டுத் தன்னைப் பற்றிய உயர்ந்த எண்ணத்தை மாற்றிக்கொள்வது போலவும், கமலமும் அதைக் கேள்விப்பட்டு, தன்னை இதயமில்லாதவன் என்று ஏசுவது போலவும், தான் அவர்களை வசைபாடி, தன் பெருமையை வெளிப்படுத்திக் கொள்வதுபோலவும், அதிலே அவர்கள் பயந்து அடங்கி விடுவதுபோலவும் கற்பனை செய்து, அதற்கு 'முற்றிற்று'ம் போட்டுக் கொண்டான். எழுத்தாளனல்லவா? இயற்கை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் இதயத்துக்குள் நாடகமாக்கி முடித்து விடுவதுதானே. எழுத்தாளனுக்குள்ள தனிச் சிறப்பு!

சிந்தனையிலேயே நின்ற அவனை, பின்னின்று ஒரு குரல் அழைத்தது. திரும்பினான். இந்திரா நின்றாள்.

''ஏன் இங்கேயே நிற்கிறீர்கள்?''

--பாலன் பதில் பேசவில்லை.

''இருட்டிவிட்டது தெரியவில்லையா?''

--பாலன் அசட்டுச் சிரிப்பை வடித்து வைத்தான்.

''வாருங்கள். நேரமாகிவிட்டது.''

--அவன் மௌனமாக முன் நடந்தான்.

--இந்திரா சொன்னாள் : ''அவளுக்குச் சொந்த ஊர் பட்டணத்துக்குப் பக்கம்தானாம். பெயர், அம்பிகாவாம். பாவம்! அழுதுகொண்டே இருக்கிறாள்.''

பாலன், தன்னையுமறியாமல் ''ஆமாம்'' என்றான்.

'உங்களுக்கு எப்படித் தெரியும்?'' - இந்திரா, ஆச்சரியத்தோடு கேட்டாள்.

'' உம்....தெரியாது....இல்லை. சொன்னார்கள்...'' - பாலன் திணறினான்.

''சரி! ஏதோ குழப்பத்



திலிருக்கிறார்'' என்று நினைத்த இந்திரா, கேள்விகளை முடித்துக் கொண்டாள். இருவரும் வீட்டினுள் வந்து சேர்ந்தார்கள். எதிர்கொண்ட கமலம், இந்திராவிடம் சொல்லும் பாவனையாக, ''வெளித்திண்ணையில் பத்துப் பதினைந்து பேர் வந்து உட்கார்ந்திருக்கிறார்கள்'' என்று பாலனிடம் கூறினாள். பாலன், தன் நினைவற்ற நிலையில் வெளிப்புறம் வந்தான். அங்கே செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் பாலனுக்கு வாழ்த்துக் கூறுவதற்காக வந்திருந்தார்கள். பாலன் எல்லோருக்கும் வணக்கம் கூறி வரவேற்றான். அந்த மாணவர்களுடனேயே சுந்தரமும் உட்கார்ந்திருந்தான். அழகிய தமிழிலே அந்த மாணவர்களும் ஆசிரியர்களும் பாலனை வாழ்த்தினார்கள். ஒரு மாணவன் பாலனின் தோளில் கைபோட்டு ''ஒருமனதாயினர் தோழி! திருமண மக்கள் என்றென்றும் வாழி!'' என்று மெல்லிய குரலில் பாடினான். எல்லா மாணவர்களும் தாங்கள் புதுக்கோட்டைக்குத் திருமணத்திற்கு வரமுடியாது போனது பற்றி பாலனிடம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். பாலன் எல்லாவற்றிற்கும் உயிரற்றசிரிப்பையே பதிலாகத் தந்தான். ஒன்றுக்கொன்று சம்மந்தமில்லாமல் பதில் சொன்னான். பதில் சொல்லிவிட்டு பிறகு, ''என்ன கேட்டீர்கள்?'' என்று கேள்வியையும் தொடுத்தான். அவனது குழப்பத்தின் அடிப்படையை அறியாத மாணவர்கள், அவன் காதற்களிமயக்கில் இருப்பதாகப் பேசிக்கொண்டார்கள். கடைசியாக எல்லோரும் தாங்கள் கொண்டுவந்திருந்த பரிசுகளை பாலனிடம் கொடுத்துவிட்டு விடை பெற்றுக்கொண்டார்கள்.

பாலன் கூடுமானவரை அம்பிகாவின் கண்களிலே தட்டுப்படாமலிருக்கவே ஆசைப்பட்டான். ''சாப்பிட வாருங்கள்'' என்று இந்திரா வந்து அழைத்தபோது கூட, ''சாப்பாட்டைத் திண்ணைக்கே கொண்டுவந்துவிடு'' என்றான். இந்திராவுக்கு ஒன்றும் புரியவில்லை. ''பந்தியில் இலையெல்லாம் போட்டிருக்கிறது. நீங்களும் அண்ணாவும் அங்கேயே வந்துசாப்பிடுங்கள்'' என்று பரிவோடு மீண்டும் அழைத்தாள் இந்திரா. சுந்தரம் பாலனின் தோளில் தட்டிக் ''அங்கேயே சாப்பிட்டு விடலாம் வா''-என்று உள்ளே அழைத்துக்கொண்டு போனான். அங்குமிங்கும் பார்த்தபடியே பாலன் உள்ளே சென்று பந்தியில் அமர்ந்தான். பக்கத்து அறையில் அம்பிகாவும் கமலமும் பேசிக்கொண்டிருக்கும் சப்தம் அவனுக்குக் கேட்டது. உணவிலே மனம் செல்லவில்லை. ஒருவழியாக உணவை முடித்துக் கொண்டு எழுந்தான். கை கழுவும்போது திரும்பிப் பார்த்தான். கமலமும்அம்பிகாவும் அப்போது தான் எழுந்து அந்தப் பக்கம் வந்துகொண்டிருந்தார்கள். பாலனைப் பார்த்த அம்பிகா திடுக்கிட்டாள். அத்தானுக்கு முன்னாள் நிற்க வெட்கப்பட்ட கமலம் உள்ளே ஓடிப்போய் ஒளிந்து கொண்டாள். ஆச்சரியத்தால் ''ஆ! பாலன்!''-என்று அரை குறைக் குரலில் சப்தமிட்ட அம்பிகாவை யாருக்கும் தெரியாமல் கையைப் பிடித்து ஒரு தனியறைக்குள் இழுத்துக்கொண்டு போனான் பாலன்.

''யாரிடமும் ஒன்றும் சொல்லாதே! பனிரெண்டு மணிக்கு என் அறைக்கு வா! என் அறை மாடியில் இருக்கிறது.'' என்று சொல்லிவிட்டு உடனே வெளியிலே போய்விட்டான். அம்பிகா திகைத்தபடி அங்கேயே நின்று கொண்டிருந்தாள். அடுத்த அறையிலிருந்த கமலம் ஒன்றுமறியாதவள்போல் வெளியில் வந்து அம்பிகா இருந்த அறைக்குள் நுழைந்து அவளைச் சாப்பிட அழைத்தாள். அம்பிகா குழப்பத்தோடு கமலத்தைப் பின் தொடர்ந்தாள்.

நள்ளிரவு! எல்லோரும் உறங்கிக்கொண்டிருந்தார்கள் மாடி அறையில் பாலனும், கீழ் வளைவில் அம்பிகாவும் கமலமும் மட்டும் தூக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்தார்கள். அம்பிகா எப்போது எழுந்து போவாள் என்பதைக் கவனிப்பதிலேயே இருந்தாள் கமலம். அம்பிகா மெதுவாக எழுந்தாள். உறங்குபவர்கள்மீது கால் பட்டுவிடாமல் மெதுவாக நடந்தாள். மாடிக்கு வந்து சேர்ந்தாள். அவளை எதிர்பார்த்துக் கொண்டே இருந்த சுந்தரம், அவள் உள்ளே வந்ததும் மெதுவாகக் கதவைச் சாத்தினான்.

''அம்பிகா, நீ ஏன் இங்கே வந்தாய்? நான்தான் உனக்கு எவ்வளவோ சொல்லிவிட்டு வந்தேன்!'' என்று கேட்டான். அம்பிகா கண்ணீர் சிந்தியவாறு நின்றாள்.

''அம்பிகா, உன்னை நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். நீ இன்றிரவே இந்த இடத்தைவிட்டுப் போய்விடு. எப்போதுமே என் நன்மையை நாடுபவள் நீ. இப்போதும் நீ அந்த உதவியை எனக்குச் செய்யமுடியும். நீ என்னிடத்தில் கொண்ட பற்றும் பாசமும்தான் உன்னை இங்கு கொண்டுவந்து சேர்த்தன என்பது எனக்குத் தெரியும். தயவுசெய்து, இன்றிரவே நீ போய்விடு. இன்னும் இரண்டு நாளில் நான் சென்னை வந்துவிடுவேன். எல்லாம் அங்கே பேசிக்கொள்ளலாம்.''-என்று கூறி இருபது ரூபாய்களையும் எடுத்துக் கொடுத்தான். அதைக் கையில் வாங்கிக் கொண்ட அம்பிகா, அவன் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டு தன் ரவிக்கைக்குள் வைத்திருந்த கடிதத்தை எடுத்து அவன் கையில் கொடுத்துவிட்டு ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அதிசயிக்கத்தக்க விதமாக கீழே இறங்கி நடந்தாள். எதற்காக அவள் அவனைத் தேடி வந்தாள்? அவனிடம் எதை எதிர்பார்த்தாள்? எந்த நிலைமையைப் புரிந்து கொண்டு பதில்கூடப் பேசாமல் வெளியேறினாள் என்கிற கேள்விகளுக்கு விளக்கமே இல்லாமல் அம்பிகா நள்ளிரவில் அந்த இடத்தைவிட்டு வெளியேறினாள். வெளியில் நின்று ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த கமலத்திற்கு இது பெரிய புதிராக இருந்தது. ''பாலனுக்கும் அவளுக்கும் என்ன உறவு? அவள் அவனிடம் கொடுத்த கடிதம் எதைப் பற்றியது? பாலனால் கெடுக்கப்பட்டவளா அவள்? அப்படி இருந்தால் அவன் 'போ' என்று சொன்னதும் சுலபத்தில் போயிருக்க மாட்டாளே'' என்றெல்லாம் கமலம் குழம்பினாள். அம்பிகாவைப் பின்தொடர முடியாதவளாய் கீழ் வளைவுக்கு வந்து படுத்துக்கொண்டாள். அம்பிகாவை அனுப்பிய பாலன் அவள் போய்விட்டாளா என்பதைக் கவனிக்க பூனைபோல் மெதுவாகக் கீழே இறங்கிவந்தான். கதவைத் திறந்துகொண்டு தானும் வெளியேறினான். இதைக் கவனித்துக்கொண்டிருந்த கமலம் ஒரு யோசனை செய்தாள். பாலனிடம் அம்பிகா கொடுத்த கடிதத்தை அவன் தன் தலையணைக்கு அருகிலே தான் வைத்திருப்பான், அதை எடுத்துக்கொண்டு வந்துவிட வேண்டும் என்று நினைத்து எழுந்து மாடிக்குச் சென்றாள். தலையணையைப் புரட்டிப் பார்த்தாள். அவள் நினைத்தபடியே அந்தக் கடிதம் அங்கே இருந்தது. உடனே அதை எடுத்துக் கொண்டு வந்துவிடாமல் பெண் மனத்திற்கு இயற்கையாக உள்ள பலவீனத்தின்படி அதைப் பிரித்து அங்கேயே படிக்க ஆரம்பித்தாள். அவள் நெஞ்சு மட்டும் படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது. படித்து முடித்து அதை தன் ரவிக்கைக்குள் வைத்துக்கொண்டாள். திடீரென்று மாடியறையின் விளக்கு அணைந்தது. கமலம் திடுக்கிட்டு, கூச்சலிடப் போனாள். ஒரு கை அவளது வாயைப் பொத்திற்று. ரவிக்கையின்மீது கை வைத்தது.

6

தடுத்தாட்கொண்ட படலம்

பெண்ணாகப் பிறந்தாலே-வாழ்வில்
எந்நாளும் துயர்தானே
உன்னாசைக் கனவெல்லாம்
மண்ணாகிப் போனதே.

—ஓர் இரவு-படத்தில்

சொக்கப்பர்வீட்டிலிருந்துவெளியேறிய அம்பிகா கால்போன போக்கில் போய்க்கொண்டிருந்தாள். உலகத்திலுள்ள சகல உயிர்களும் தன்னை வெறுத்தொதுக்குவதுபோலவும், ஏளனம் செய்வதுபோலவும்எண்ணி எண்ணி அவள் மனம் படாத பாடு பட்டது. எங்கே போகிறோம் என்று தெரியாமலேயே நடந்த அவள், பொழுது விடிகிற நேரத்தில் வளையபட்டிக்கு வந்து சேர்ந்தாள். அப்போதுதான் சில காபி கிளப்புகள் திறக்கப்பட்டு, அதிகாலை நேரத்திற்கு இயற்கையான சுருசுருப்போடு இயங்கிக் கொண்டிருந்தன. அம்பிகா ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்து காபி கேட்டாள். அவள் தோற்றத்தைப் பார்த்த ஹோட்டல்காரர் முதற் கேள்வியாக ''காசு இருக்கிறதா?'' என்கிற கேள்வியைக் கேட்டார். அம்பிகா, உயிரற்ற நிலையில் ''இருக்கிறது'' என்று தலையாட்டினாள். ஹோட்டல்காரன் காபி கொடுக்க, குடித்து முடித்தாள். அப்பொழுது புதுக்கோட்டைக்குப் புறப்பட்ட பஸ் ஒன்று அந்த ஹோட்டல் அருகில் வந்து நின்றது. பிரயாணிகளும் ட்ரைவரும் இறங்கி காபி சாப்பிட்டார்கள். அம்பிகா யோசனை செய்தாள். அந்த பஸ்ஸிலேயே புதுக்கோட்டை போய், அங்கிருந்து சென்னை சென்றுவிட முடிவுகொண்டாள். பிரயாணிகளோடு பஸ்ஸில் ஏறி அமர்ந்தாள். சுமார் ஒன்பது மணிக்கு நமனசமுத்திரத்தைக் கடந்து புதுக்கோட்டைக்கு ஐந்தாவது கல்லில் வந்துகொண்டிருந்தது, அவள் சென்றுகொண்டிருந்த பஸ். அம்பிகா, அதன் பின்-சீட்டில் உட்கார்ந்திருந்தவள், பின்னால் ஒரு காரின் 'ஹாரன்' சத்தம் கேட்டதும் கண்ணாடி வழியாகத் திரும்பிப் பார்த்தாள். அங்கே பழைய மாடல் ஆஸ்டின் கார் ஒன்று வந்துகொண்டிருந்தது. அம்பிகா கூர்ந்து கவனித்தாள். அந்தக் காரில் மங்கையர்க்கரசி, சின்னப்ப பிள்ளை, சுந்தரம், கமலம் நால்வரும் உட்கார்ந்திருந்தனர். அம்பிகா திடுக்கிட்டாள். அவள் உடம்பு நடுங்கிற்று. காரணம், கமலம் விம்மி, விம்மி அழுதபடி மங்கையர்க்கரசியின் தோளில் சாய்ந்து கொண்டிருந்தாள். சுந்தரமும் சின்னப்ப பிள்ளையும் சோகமாக உட்கார்ந்திருந்தனர். அம்பிகா பஸ்ஸை நிறுத்துவோமா என்று துடித்தாள். அதற்குள் சின்னப்ப பிள்ளையின் கார் பஸ்ஸை முந்திக்கொண்டு முன்னால் சென்றுவிட்டது.

பஸ் புதுக்கோட்டைக்கு வந்து சேர்ந்தது. கீழே இறங்கிய அம்பிகா, கமலத்தின் பெற்றோர் பெயர் தெரியாததால் அவர்கள் வீட்டை எப்படி விசாரிப்பதென்று தெரியாமல் திகைத்தாள். ஊர் முழுக்கச் சுற்றிக் கொண்டே வந்தாள். கடைசியில் மேல ராச வீதியில் அந்தக் கார் நிற்பதைக் கண்டாள். வீட்டிற்குள்ளே எட்டிப்பார்த்தாள். அங்கே மங்கையர்க்கரசி கமலத்தை வசைபாடிக்கொண்டிருந்தாள். ''எங்க மானு மரியாதையைக் கெடுத்தியேடி நாசமாப் போறவளே!''-என்று மங்கையர்க்கரசி திட்டும்போது அம்பிகா ஒன்றும் புரியாமல் விழித்தாள். கமலத்தின் முகம் சிவந்து வீங்கியிருந்தது. அம்பிகா மனதைத் திடப்படுத்திக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள்.



(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறகடித்துத் திரியும் கடந்த கால நினைவுகளுக்கு கூடணைய ஒரு புகலிடம்...?

★

யாரைக் குறை சொல்வதென்றே தெரியவில்லை. எனினும் கருக்கள் எல்லாம் வெட்ட வெளியிலேயே சிதறிக் கிடக்கின்றன. எல்லாவற்றையும் வாரியெடுத்து ஆழ்கடலில் வீசிவிட்டால் நிம்மதி கிட்டும். ஆக்க வேலைக்கு திரட்டிய அணியிலே ஒற்றுமையில்லை; ஒன்றுபட்ட தன்மையில்லை. எல்லோருக்கும் பொன்னாசை, பொருளாசை. காவல் இல்லாத தோட்டத்தில் கண்டவர்கள் நுழையத்தான் செய்வார்கள்.

நான் எல்லாவற்றையும் எடுத்துச் சொன்னேன். பதில்; ஏசிக்காட்டியதும், தூற்றிப் பேசியதும்தான்.

இந்த நிலைகுலைந்த தன்மையே எங்கள் தோடர்புக்கு குறுக்காக நின்றது என்பதுதான் விந்தை!

தீக்குண்டம் வளர்த்து, எதை எதையோவெல்லாம், 'ஆஹுதி' செய்து, அவளை மற்றவன் கையில் பிடித்துக் கொடுத்தனர். நான் எங்கோ இலட்சியக் கனவுகளுடன் உலவிக்கொண்டிருந்தேன். தோல்வியை மடியில் கட்டிக்கொண்டு திரும்பி வந்தபோது மற்றொரு தோல்வி, இங்கு காத்துக்கிடந்து வரவேற்பு சொல்லிற்று!

...யாரைக் குறை சொல்வதென்றே தோன்றவில்லை!

◉ ◉ ◉

வெண்பாப் போட்டி 19
புதுமுறை

◉

"கலை" என்று எடுத்து "தலை" என்று முடிக்கவும்! அமைப்பு இப்படி:

கலை... ——— ——— ———
——— ——— ——— | —
——— ——— ——— ———
——— ——— .... தலை.

['கலை' என்பது, கலைந்து, கலையாது என்பது போலவும் வரலாம். 'தலை' என்னும் முடிவு, விடுதலை, தறுதலை என்பது போலவும் வரலாம்.]

வெண்பாப் போட்டி
தென்றல் :: சென்னை 6.

கொண்டுவந்து போட்டுக் கொளுத்து!

◉

குறள் அன்பர்கள் சார்பில் திருச்சி கண்டோன்மெண்டில் சென்றவாரம் ஒரு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மதுரை திராகராசர் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மா. ராசமாணிக்கனார் தலைமை வகித்தார். பேராசிரியர் மாஸ்கரனுஸ் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். டாக்டர் ராசமாணிக்கனார் பேசுகையில்,

"தமிழ்நாட்டில் மாணவர்கள் எல்லோரையும் திருக்குறள் படிக்கச்செய்தவர் முன்னாள் கல்வி மந்திரியான அவினாசிலிங்கம் செட்டியார் தான். அதேபோல் பொதுமக்களை திருக்குறள் படிக்கச் செய்தவர் ஈ. வெ. ரா. பெரியார்தான். இவர்கள் இருவருக்கும் நன்றி செலுத்த தமிழ்நாடு கடமைப்பட்டதாகும்.

'வடமொழி நூல்களைத் தழுவி திருக்குறள் எழுதப்பட்டது' என்று சிலர் சொல்லுகிறார்கள். இவர்கள் ஆழ்ந்த ஆராய்ச்சியும், தமிழறிவும் இல்லாதவர்கள் ஆவார்கள். திருக்குறள் எந்த ஒரு மொழியையும் தழுவி எழுதப்பட்டதல்ல. திருவள்ளுவரால் முழுதுணர்ந்து செய்யப்பட்ட முதல் நூலே ஆகும்.

"தமிழ் ஆசிரியர்கள் எப்பொழுதும் எங்களுக்கு விரோதமாகவே இருக்கிறார்கள்!" என்று சில காங்கிரஸ்காரர்கள் என்னிடம் சொல்லுவார்கள். "எப்படி விரோதமாக இருக்கிறார்கள்?" என்று நான் கேட்பேன்.

"தமிழ் ஆசிரியர்கள் இந்தியை எதிர்க்கிறார்கள். எப்பொழுது பார்த்தாலும் தமிழ் தமிழ் என்றே மாரடிக்கிறார்கள்" என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுவார்கள்.

அவர்கள் சொல்லுவது உண்மைதான். தமிழ் நூல்களைப் படித்த தமிழாசிரியர்கள் தமிழ்ப் பற்று மிகுந்து, தமிழை அழிக்க வரும் பிற மொழிகளை வெறுப்பதே இயற்கை ஆகும். இதை அறியாதவர்கள்தான் தமிழ் ஆசிரியர்களுக்கு "கருப்புச் சட்டை" மாட்டிவிடுகிறார்கள்!

"தமிழாசிரியர்கள் மாணவர்களை கெடுத்துவிட்டார்கள்" என்றும் சிலர் சொல்லுகிறார்கள். நாங்கள் (தமிழாசிரியர்கள்) சொல்லிக்கொடுக்கிறோம். "பாஞ்சாலி ஐந்து பேர்களை கலியாணம் செய்துகொண்டாள்!" என்று நாங்கள் ஆரம்பித்ததுமே "நில்லுங்கள் சார்!" என்று மாணவன் சொல்லுகிறான்.

"ஒருத்தி ஐந்து பேர்களை கலியாணம் செய்துகொள்ளலாமா!" என்று மாணவன் கேட்கிறான்.

"எனக்கு கணவன் வேண்டும்!" என்று சிவபெருமானை நோக்கி பாஞ்சாலி வரம் கேட்டாள். 'கேட்கும்பொழுது கணவன் வேண்டும்! கணவன் வேண்டும்!" என்று ஐந்து முறை கேட்டாள்! ஆகவே அவளுக்கு ஐந்து பேர்களை கலியாணம் செய்துகொள்ளும் வரத்தை சிவபெருமான் கொடுத்தார் என்று நாங்கள் பதில் சொல்லுவோம்.

"பாஞ்சாலிக்கு ஒரு கணவன்தான் வேண்டும், அவசரத்தில் 'கணவன் கணவன்' என்று ஐந்து முறை கேட்டுவிட்டாள்" என்பதை அறிந்துகொள்ளும் அறிவுகூடவா கடவுளுக்கு இல்லை.!' என்று அடுத்த கேள்வியை மாணவன் கேட்கிறான். இதற்கு நாங்கள் என்ன பதில் சொல்லுவது. 'கடவுளுக்கு அறிவில்லை என்று சொல்லமுடியுமா! இப்படி எத்தனையோ கேள்விகளை மாணவர்கள் கேட்கிறார்கள். அவற்றிற்கு பதில் சொல்ல முடியாமல் நாங்கள் (ஆசிரியர்கள்) திண்டாடுகிறோம்! 'பாரதம் ஒரு கதை. கதைக்கு காலுண்டா!' என்று நாங்கள் சொன்ன பின்தான், "அப்படியென்றால் சரி, அடுத்த பாடத்தை ஆரம்பியுங்கள்" என்று மாணவன் சொல்லுகிறான்.

"இப்பொழுது மாணவர்களுக்கு இருக்கும் பாடப் புத்தகங்கள் மாணவர்களின் அறிவு வளர்ச்சியை தடுப்பதோடு அவர்களுக்கு சிறிது அளவுகூடப் பயன் அளிக்கவில்லை. இந்தப் பாடப் புத்தகங்களை எல்லாம் தீயில் போட்டுக் கொளுத்திவிட்டு, மாணவர்களுக்குப் பயன் தரும்படியான புதிய பாடப் புத்தகங்களை வெளியிடவேண்டும். ஒவ்வொரு மந்திரியைப் பார்க்கும்போதும் இதைத்தான் சொல்லி வருகிறேன்" என்று கூறிமுடித்தார்.

◉ ◉ ◉

கனவுகளின் வெண்புறுக்களை காதல்வானின் எல்லையைத் தொட்டுவர பறத்திவிட்டேன். அணி அணியாக வட்டமிடும் அவைகளை நெற்றியில் கைசேர்த்து கண்ணிற்கு நிழல் கொடுத்து, கழுத்து நோவதையும் பொருட்படுத்தாமல் அண்ணாந்து பார்த்து ரசித்துக்கொண்டிருந்தேன். ஆனால்...சிலகண நேரத்தில் அவைகள் என்னை ஏமாற்றிவிட்டு எங்கோ கண்காணாத திசைக்குப் பறந்து சென்றுவிட்டன. எரியும் எண்ணங்களும் குமுறும் இதயமும் மிச்சம்!

என் இதயக் குருதியையே வண்ணமாகக் கொண்டு அந்த ஒவியங்களைத் தீட்டியிருந்தேன். அவைகள் எல்லாம் இன்று எரியும் தீயில் இறைக்கப்பட்டுவிட்டன. எனினும் நான் அந்த காட்சியை கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

நான் விடை பெறுகிறேன். அந்த மற்ற எல்லைவரைத் தொடரும் நிழல்க் கோடுகளை நினைக்கையில் எனக்கே சிரிப்பு வருகிறது இலட்சியவாதியின் காதல்!

...மீண்டும்...

அவள் நினைவு-என்பது என்னைப் பாதித்த ஒருஉபாதையாகமாறிற்று: இடை இடையே அது பயங்கர உருப்பெற்று என்னையே ஆட்டிப் படைக்கிறது. சோர்ந்து மெலிந்து போகிறேன். எங்கோ ஒரு சூன்யத்தில் அடைந்து கிடந்த என்னை நிலா வெளிக்கு இழுத்து வந்தாள். உறங்குபவனை எழுப்பி விட்டு விட்டு சோறில்லை என்றது போலாயிற்று.

என்னைச் சுற்றிலும் ஆசைப் பார்வைகளும் வேட்கை நிறைந்த கண்களும் உலவுகின்றன. நானும் ஆசைப்பட்டேன். வேட்கையின் 'பயங்கரத்தின்'முன் தலைகுனிந்தேன்.

ஆனால்...

அந்த முட்புதர்களிடையே நான் மீள முடியாதபடி சிக்கிக்கொண்டேன். பயங்கரப் பசியும் அடக்க முடியாத தாகமும் எங்கெல்லாமோ ஓடித்திரிகிறேன்...

உலகம் விசித்திரமானது. அதன் பண்புகள்தான் ஈன்ற சேய்க்கு பாலூட்டாத தாயைப்போல!

அல்லலுறுகிறேன். கனவுகளாக இருக்கவேண்டிய எண்ணங்களை தேக்கி எடுத்துக்கொண்டு காணும் அழகிகளிடமெல்லாம் பாயவிட்டு மனம் புண்ணாகிறேன். இரவின் தனிமை-மனதின் கொதிப்பு-இத்தனைக்கும் அவள் ஆறுதலாக இருந்தாள். இன்று?...

★

நான் மனிதன் என்பதையே மறந்தேன். மண்புழுவாக ஊர்ந்தேன். எல்லோருமே என்னை மிதித்துத் துவைத்தார்கள். நான் கவைக்குதவாத பிண்டம்!

காலமெல்லாம் நுனிப்புல் மேய்ந்து அலைந்தேன். சமூக நியதிகள் எதுவுமே பிடிக்கவில்லை. கடவுளையும் மதத்தையும் துரும்பென மதித்தேன். அவைகள் மனிதராசிக்குப் பிடித்த ஊளை நோயென அண்டம் அதிரச் கத்தினேன்.பயன்? கெட்டவனாய்-கேடு விளைவிப்பவனாய் உருமாறியதுதான்.

நான் காரணம் கேட்பேன். பதில் சொல்ல ஒரு குரலாவது அன்றிருக்காது. என் சந்ததிகள் காரணம் கேட்கும். பிறகு...?

★

உரத்துக் கெக்கலித்து சிரிக்கத் தோன்றுகிறது. 'அவள் என்னை இன்னும் விரும்புகிறாளாம்! எனக்கு சிரிப்புத்தான் வருகிறது. என்றால் சிரித்து மறைக்கத்தனே முடிகிறது. உடையவள் இருக்கையில் மற்றொருவனை விரும்புவது...'பாபம்' என்று அவளுக்கு அறிவித்து விடலாம் என எண்ணுகிறேன்.

இல்லை.

நான் இலட்சிய வீரன்; நானும் அவளை விரும்புகிறேன். எனினும் ஆழ்கடலுக்கும் மலை முகட்டிற்குமுள்ள வேற்றுமை...

கடைசியில் எதுவும் இல்லையென்றாகிவிட்டது. நான் என் ஆசைகளையெல்லாம் ஒதுக்கி வைத்தேன். அந்த இனிய'பால்க்குமிழ்'உடைந்து போயிற்று. "நீயும் ஒரு மனிதனா?" என்று காறி உமிழ்ந்தான் அவளது உடையவன்.

நான் மனிதனா? என்ற கேள்வியை காற்றிலே வீசியெறிந்துவிட்டு சூன்யத்தில் பார்வையை விட்டேன். அவளை இழுத்துக்கொண்டு அவன் போய்க்கொண்டிருந்தான்,

எது எதற்குச் சொந்தம்? அவள் அவனுக்கு சொந்தம் என அவன் எண்ணுகிறான்.

★

எங்கும்புழுக்கம். இரை சேர்க்காத தூண்டிலையும் கொத்தி இழுத்துப் பார்க்கும் அளவிற்கு வெறி. சுற்றிலும், அவதியும் அதைவிட மேலாக அலட்சிய மனப்பான்மையினரும்!

...உலகம் என்னை மறக்கிறது. என்னோடு தொடர்பு கொண்ட ஒவ்வொன்றையும் நான் மறக்கிறேன்...

தளிரும் மலரும் கருகித் தீய்ந்துவிட்டன. இறைந்து கிடக்கும் துயரம். மற்றவர்கள்முன் செலவாணியாகாத ஏதோவொன்று!

பிறகு.........பிறகு.........வெறுங்கையோடு வெட்டவெளிக்கு வீசியெறியப்பட்டேன்.

கசங்கிய மலரும்...நரம்பு அறுந்த வீணையும்...

— **ஆ. மாதவன்**

புதுவழி காட்டிய பழம் புலவன் யார்?

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

மணிமேகலையை வைப்பாட்டி வாழ்விலே கொண்டுபோய்த் தள்ள முடியுமே ஒழிய, மணவாழ்விலே நுழைக்க முடியாது. எனவேதான், சாத்தன் அவளுக்குத் துறவு வாழ்வைக் கொடுத்துத் தூயளாக்கினான். அப்படிக் கொடுத்ததன் மூலம், பெண்ணுக்கு மோட்சமில்லை என்று பிதற்றிக்கொண்டு, அவர்களை அடிமை வாழ்வில் ஆழ்த்தி வைத்த பிற்போக்கு வாதிகளைச் சாடினான்; அவளைச் சமய நூல்களில் தேர்ச்சி பெறச் செய்து, சமயவாதிகளோடு, வாதிட்டு வெல்ல வைத்ததன் மூலம் "நுண்ணிய நூல் பல கற்பினும், பெண்ணறிவென்பது பெரும் பேதமைத்தே" என்று இசை பாடிய எத்தர்களின் பகட்டுத் திரையைக் கிழித்தெறிந்தான். பெண்ணுக்கு அறிவு உண்டு; வீடு உண்டு; குலமகளுக்கு மட்டுமில்லை, கூத்திமகளுக்கும் உண்டு என்பதை வலியுறுத்தினான்.

கணிகை மகளின் வாழ்க்கையில் தூய்மையைக் கண்ட சாத்தன், உயர்ந்த குலம் என்று கருதப்படும் பார்ப்பன குலத்தில் கற்புக் கெட்ட கயத்தியையும் காண்கிறான். உயர்ந்த சாதியில் பிறந்த அனைவரும் ஒழுக்கக் குன்றுகள் இல்லை என்பதை அம்பலத்துக்குக் கொண்டு வருகிறான். ஆபுத்திரனை ஈன்ற சாலி, வாரணாசியில் வாழ்ந்த அபஞ்சிகன் என்ற பார்ப்பனன் மனைவி; அவள் கற்புக் கெட்டுத் தன் பாவத்தைக் கழுவ குமரி முனைக்கு வருகிறாள். வழியில் ஆபுத்திரனைப் பெற்றெடுத்துப், பெற்ற இடத்திலேயே போட்டுவிட்டுப் போகிறாள்! இவ்விதம் அவள் தன் பாவத்தைக் கழுவிக் கொள்கிறாள்! கணிகை குல மணிமேகலையின் உயர்ந்த பண்பாடு எங்கே! பார்ப்பன குலத்தில் பிறந்த இப்'பத்தினி'யின் பதிவிரதா தர்மம் எங்கே!.... எங்கே சாதி உயர்ச்சி? ஆபுத்திரன் எவனுக்குப் பிறந்தான்? புலையனுக்கா? இல்லை என்று சொல்ல முடியாது. 'புலைச்சிறுமகன்' என்பதுதான் பார்ப்பனர் ஆபுத்திரன் நெற்றியில் கட்டும் பட்டம்!

ஒரு சாதிக்கு ஒரு நீதி உரைக்கும் மனுதர்மம், பார்ப்பனப் பெண் கற்புக் கெட்டால், தீர்த்த யாத்திரை செய்து அவள் தன் பாவத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்று கூறுகிறது. இப்படித் தீர்த்தமாடுவதால் அவள் பாவம் எப்படிப் போகும் என்ற செய்தி சாத்தனுக்குப் புலப்படவில்லை. ஆகவே, மேற்கூறிய நிகழ்ச்சியைக் கூறி, மறைமுகமாக, உயர்ந்த சாதிப் பெண்களின் கூடா ஒழுக்கத்தை எள்ளி நகையாடுகிறான்; அடுத்தாற்போல், கற்புக் கெட்ட சாலிக்குப் பிறந்த ஆபுத்திரனை நேரிய வாழ்வு உள்ளவனாக அமைத்துக் காட்டுகிறான்; பிறப்புக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பில்லை என்பதை இதன் மூலம் மீண்டும் வற்புறுத்துகிறான்.

வேள்வியில் கொல்லப்பட இருந்த பசுவை ஓட்டிச் சென்ற ஆபுத்திரனை நோக்கிப் பார்ப்பனர்,

"மன்உயிர் முதல்வன் மகன்,
எமக்(கு) அருளிய
அருமறை நன்னூல் அறியா(து)
இகழ்ந்தனை;
தெருமரல் உள்ளத்துச் சிறியை;
நீ அவ்
ஆமகன் (ஆதற்கு) ஒத்தனை
அறியாய்
நீமகன் அல்லாய் கேள்."

என்று இகழ்ந்தனர். அவர்கள் எள்ளலைக் கேட்டு நகைத்தான் ஆபுத்திரன்; தன்னைப் பசுவுக்குப் பிறந்தவன் என்று இகழ்கிற பார்ப்பனருடைய மூதாதையரை எண்ணினான். அவர்கள் மட்டும் மனிதர்களுக்கா பிறந்தார்கள்? அசலன் பசுவுக்குப் பிறந்தான்; சிருங்கி மானுக்குப் பிறந்தான்; விரிஞ்சி புலிக்குப் பிறந்தான்; கேசகம்பளன் நரிக்குப் பிறந்தான். இவர்கள் எல்லோரும் பார்ப்பனருக்கு முனிவர்கள்!

"ஆன்மகன் அசலன்,
மான்மகன் சிருங்கி,
புலிமகன் விரிஞ்சி,
புரையோர் போற்றும்
நரிமகன் அல்லனோ
கேச கம்பளன்?
ஈங்(கு) இவர் நும்குலத்(து)
இருடிகணங்கள் என்(று)
ஓங்(கு) உயர் பெருஞ்சிறப்பு
உரைத்தலும் உண்டால்"

என்று நகைக்கிறான் ஆபுத்திரன். தங்கள் சாதி தாழாச் சாதி என்று எண்ணிய பார்ப்பனருக்குத் தலை சுற்றியது; வாய்ப் பேச்சற்று நின்றனர். பிறகு, அவரில் ஒருவன், சாலி கற்புக் கெட்டு, ஆபுத்திரனை ஈன்று துறந்தாள் என்ற உண்மையை எல்லோரும் அறியும்படி பறை சாற்றினான். ஆபுத்திரன் சிறிதும் சளைக்கவில்லை. தன் தாய் கற்புக் கெட்டவள் என்பதை அவன் மறுக்கவில்லை. ஆனால் அதை எடுத்துக் கூற யாருக்கு உரிமை உண்டு? கற்புக் கெடாத குடியில் பிறந்தவர்கள்தாமே சுட்டிக் காட்ட வேண்டும்? இப்பார்ப்பனர்களே கற்புக் கெட்ட கணிகையின் குடியில் பிறந்திருக்கும் போது, அவர்களுக்கு ஆபுத்திரனை இகழ்ந்துரைக்க என்ன உரிமை உள்ளது? ஆகவே, ஆபுத்திரன் அவர்களை நோக்கி,

"மாமறை மாக்கள் வருகுலம்
கேண்மோ;
முதுமறை முதல்வன் முன்னர்த்
தோன்றிய
கடவுள் கணிகை காதலஞ்
சிறுவர்
அருமறை முதல்வர் அந்தணர்
இருவரும்;
புரிநூல் மார்பீர் பொய்உரை
ஆமோ?
சாலிக்(கு) உண்டோ தவறு?"

என்று கேட்கிறான்.

மறை முதல்வர்கள் எனப்படும் அகத்தியனும் வசிட்டனும் யாருக்குப் பிறந்தவர்கள்? பிரம்மனுக்கும், தெய்வக் கணிகை (தேவதாசி) யாகிய திலோத்தமைக்கும் தோன்றியவர்கள். அவர்கள் வழி வந்தவர்கள் பார்ப்பனர்கள்; ஆகவே, எப்படி அவர்கள் சாலியின் கற்புக் கேட்டைப்பற்றிப் பேச முடியும்? உயர்ந்த சாதியில் பிறந்து விட்டோம், பிரம்மன் முகத்திலிருந்து பிறந்த தமக்கே உயர்வு என்று இறுமாந்திருந்த பார்ப்பனருக்கு, இடிமேல் இடி! கடைசியில் பேசிப் பயனில்லை என்று ஆபுத்திரனை ஊரைவிட்டே விரட்டிவிட்டார்கள் பார்ப்பனர்கள்.

எனவே, சாத்தன் இலக்கியத்தின் மூலம் சாதிக்குச் சாவுமணியடித்தான் என்று கொள்ளவேண்டும். இந்தக் காலத்தில், சாதிவெறியும் சமயவெறியும் கொண்ட சிலர், சிலப்பதிகாரத்தைப் போற்றுவதோடு, மணிமேகலையைச் சாடுகிறார்கள்; சிலம்பைப் போற்றட்டும் தவறில்லை; ஆனால் அவர்கள் தகுதியற்ற முறையில் மணிமேகலையைச் சாடுவானேன்? கணிகை குல மணிமேகலையைச் சாத்தன் காவியத் தலைவியாக்கி விட்டானே என்ற காய்ச்சலாலா? அல்லது சாதி உணர்ச்சியைத் தவிடுபொடியாக்குகிறானே என்ற வயிற்றெரிச்சலாலா?

தமிழ் நாட்டில் இராமாயணத்தைத் தாழ்த்தினால், வைணவர் வாயை எதிர்க்கவேண்டும்; பெரிய புராணத்தைத் தூற்றினால், சைவர் மூக்கு சிவக்கும்; சிந்தாமணியைக் குறைகூறினால், சினம் பொங்கும் சைனருக்கு; தேம்பாவணியைத் தொட்டாலோ கிறித்துவர் கிளர்ச்சி செய்வர்; சீறாப்புராணத்தை இகழ்ந்தாலோ, மகம்மதியர் சும்மா இரார். ஆகவே, இவற்றுள் எதிலும் கைவைக்க முடியாது. தமிழ் நாட்டில் ஆள்பலமற்ற, கேட்பாரற்ற இலக்கியம் மணிமேகலை ஒன்றுதான்; அதைத் தாழ்த்தினால், எதிர்த்துக் கேட்க பவுத்தன் எவனும் இங்கு இல்லை; ஆகவே எளிமையாக, எப்படி வேண்டுமானாலும் அதை இழிவுபடுத்தலாம் என்ற எண்ணத்தில் சிலர் தாக்குகிறார்கள்.

குறுகிய எண்ணமும், குள்ளநரி உள்ளமும் கொண்ட சில பழம் பாசிகள் வேண்டுமாயின், சாத்தன் மணிமேகலை மூலம் தமிழைக் கெடுத்துவிட்டான் என்று ஓலமிடட்டும். ஆனால், சமுதாய முற்போக்கை விரும்பும் எவனும், விரிந்த மனம் படைத்த எவரும், மணிமேகலையைக் கொண்டாடாமல் இருக்க முடியாது. சாதி வலையில் வீழ்ந்து கொண்டிருந்த தமிழகத்தைத் தடுத்து நிறுத்தி, இலக்கியத்தின் மூலம் புது வழி காட்டிய பழம் புலவன் ஒருவன் உண்டென்றால், அவன் மணிமேகலை படைத்த சாத்தனே. ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்பே சமுதாயப் புரட்சிக்கு வித்திட்ட வீரக் கவிஞன் சாத்தன்; அவன் அன்று விதைத்த விதை, இன்று தமிழ் நாடெங்கும் மரமாகிக் கனிந்துள்ளது என்றால், அதில் மிகை இல்லை.

★ ★ ★ ★ ★

> ## முத்தோர் மொழி
>
> "மலர் ஏன் வாடி விட்டது?
> நான் அதை அவியாத காதலுடன் இதயத்தில் அரவணைத்தேன். ஆகவே அது வாடி விட்டது
> ......வீணையின் நரம்பு ஏன் அறுந்து விட்டது?
> நான் அதன் முழுநாதத்தையும் கேட்க வேண்டுமென்று மேலும் மேலும் முடுக்கினேன். ஆகவே அது அறுந்து விட்டது"
>
> —தாகூர்.

மறவாதது!

சுமார் 128 வருஷங்களுக்குமுன் நடந்த சம்பவம். அமெரிக்காவில் ஒரு மாகாணத்திலே தேர்தல் நடந்துகொண்டிருந்தது. சட்டசபை அபேட்சகராக நின்ற ஒரு வாலிபர் தம் ஜில்லா முழுதும் பிரசாரம் செய்யப் புறப்பட்டார்.

ஒருநாள் அறுவடை வயலில் விவசாயி ஒருவரோடு அவர் பேசிக்கொண்டிருந்தார். விவசாயி, "வீட்டுக்கு வாருங்களேன். சாப்பிட்டுக்கொண்டே சாவகாசமாகப் பேசலாம்" என்றார்.

அபேட்சகர், "இல்லை. நான் இங்கேயே இருக்கிறேன். அரிவாளை மட்டும் சற்றுக் கொடுத்துவிட்டுப் போங்கள். கொஞ்சம் அறுவடை செய்து பார்க்கிறேன்" என்றார்.

அப்படியே விவசாயி கொடுத்துவிட்டுச் சாப்பிடப் போனார். திரும்பி வந்தபோது ஒழுங்காக மூன்று வரிசை அறுவடை செய்து வைத்திருப்பதைப் பார்த்தார். ஆனால் அபேட்சகரைக் காணவில்லை. அரிவாள் மட்டும் வயல் வாசல்கடைசார்த்தி வைத்திருந்தது.

பல வருடங்கள் கழித்து அந்தக் குடியானவருக்கு அமெரிக்க ஜனாதிபதியின் விருந்து ஒன்றுக்கு அழைப்புக் கிடைத்தது. அவர் தம் மனைவியுடன் ஜனாதிபதியின் மாளிகையான "வொயிட் ஹவுஸ்"க்குப் போனார். ஜனாதிபதி புன்சிரிப்போடு வந்து அவர்கள் பெயரைச் சொல்லி வரவேற்றார். விவசாயி வியப்போடு, "இத்தனை வருஷம் கழித்துக்கூட எங்களை ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறீர்களே!" என்றார்.

"ஏன் ஞாபகம் இராது? அறுவடை செய்துவிட்டுப் போனேனே, அது ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டார் ஜனாதிபதி.

"ஓ! நன்றாக நினைவில் இருக்கிறது. ஆனால் ஒரு விஷயம் ரொம்ப நாளாகக் கேட்க வேண்டுமென இருந்தேன். நான் வயலில் வந்து பார்த்தபோது அரிவாள் இருந்தது. சாணைக் கல்லைக் காணவில்லை. அதை எங்கே வைத்தீர்கள்?" என்றார் விவசாயி.

ஜனாதிபதி சற்று யோசித்தார். பிறகு அவர் முகத்தில் புன்சிரிப்புத் தவழ்ந்தது. "பண்ணைக் கட்டிடத்தின் வாசல் கம்பத்தின்மேல் வைத்துவிட்டுப் போனேன்" என்றார்.

விருந்து முடிந்தவுடன் விவசாயி இல்லினாய்ஸிலுள்ள தம் பண்ணைக்குப் புறப்பட்டார். ஜனாதிபதி 25 ஆண்டுகளுக்குமுன் அபேட்சகராக இருந்தபோது வைத்த இடத்தில் அப்படியே இருந்தது அந்தச் சாணைக்கல். அந்த ஜனாதிபதி யார் தெரியுமா? நீக்ரோ விடுதலைக்காகப் பாடுபட்ட கர்ம வீரரான ஆப்ரகாம் லிங்கன்தான்!

★ ★ ★ ★ ★

மோதி உடையும் சீதையின் கற்பு!

இமயவரம்பன்

சீதை கற்புடையவளா என்கிற கேள்வி, விரும்பியோ விரும்பாமலோ, விவாதத்திற்கு வந்துவிட்டது. வந்த பிறகு உண்மையறிந்து சொல்ல வேண்டியது ஆராய்ச்சியாளர்கள் கடமை. உண்மை என்பது என்ன? விவரமான ஆராய்ச்சியின் முடிவிலே தட்டுப்படுவது. இந்தக் கட்டுரையில் சீதையின் கற்பு பற்றிய உண்மையைக் கண்டு பிடிக்க விவரமான ஆராய்ச்சி நடத்துகிறார் இமயவரம்பன்.

இந்தப் புனை பெயரிலே ஒளிந்திருக்கும் நண்பர், நாடு நன்றாக அறிந்த ஒரு புலவர். இவர்நடத்துகிற இந்த ஆராய்ச்சியின் முடிவு சீதையின் கற்பு துவண்டு போயிருப்பதைக் காட்டுகிறது. 'ஐயோ; கற்பிழந்தவளா?' என்று யாரேனும் குதித்தால் நாமென்ன செய்ய முடியும்! ஆராய்ச்சி சொல்லுகிறது! வான்மீகியையும், கம்பனையும் முழுக்கப் படித்தே புலவர் இதை எழுதுகிறார். படித்துப் பாருங்கள். [ஆ-ர்.]

(சென்ற இதழ் தொடர்ச்சி)

''உன்னை ராவணன் தொட்டெடுத்தான் என்கிறீர்கள்; நான் பெண்; தனியானவள்; அனாதை; அவனோ அரக்கன்; அளவற்றவீரம் படைத்தவன்; குரூரன்; ஆயுத பாணி; சகாயமுள்ளவன் அப்படியிருக்க நான் என்ன செய்ய முடியும்? என்றால் கூடியவரை தடுத்தேன்.

''என் உடல் பிறர் வசப்பட்டது; சுதந்தரமற்ற நான் என்ன செய்ய முடியும்? என் வசத்திலிருந்த இருதயம் அப்பொழுதும் இப்பொழுதும் எப்பொழுதும் தங்களிடமே இருக்கிறது.''

{ சருக்கம் 118 — யுத்தக் காண்டம்-வான்மீகி }

'இப்படி வரும் சீதையின் வாக்கு மூலத்'திலிருந்து சீதை உள்ளத்தால் எப்பொழுதும் இராமனுக்கே அடிமையாயிருக்கிறாள் என்று அறிகிறோம். பாராட்டுகிறோம்.

உடலால் இராவணனுக்கு அடிமைப் படுவதைத் தவிர வேறொன்றும் அவளால் செய்ய முடியவில்லை என்று சீதையே ஒப்புக்கொள்ளுகிறாள்.

''என் உடல் பிறர் வசப்பட்டது; சுதந்தரமற்ற நான் என்ன செய்ய முடியும்'' என்ற சொற்களை மீண்டும் ஒரு முறை படித்துப் பாருங்கள்.

மடியிலே இருந்தபோது தடுத்துக்கொள்ள முடியாத சீதை, இராவணன் மஞ்சத்திலே வைத்தபோது மட்டும் தடுத்துத் தன்னைக் காத்துக் கொண்டிருக்க முடியும் என்று எப்படி எண்ணக்கூடும்?

சீதையின கற்புக் கனல் அவளைக் காப்பாற்ற வில்லை. அவளும் அந்த ஆற்றலைப் பயன்படுத்தவில்லை.

இவற்றிலிருந்து சீதையின் கற்பு ஊசலாடுவதை ஒருவாறு கண்டோம்.

''பத்து மாதங்கள் வரை இராவணன் அந்தப் புரத்தில் வைத்திருந்தான் சகல விதத்திலும் அவன் வசத்திலிருந்தாய். அவனுக்கு ஸ்வாதீனப படாமல் இருக்க முடியுமா?'' என்ற இராமனது கேள்வியை நாமும் திருப்பிக் கேட்கிறோம்.

எந்த இராமன் இந்தக் கேள்விகளைக் கேட்டானோ அதே இராமன் அதே கேள்விகட்கு, சீதையை மறுபடியும் ஏற்றுக் கொள்ளும் போது சரியான மறுமொழி அளிக்க முடியவில்லை.

இராமன் அயோத்தி மாநகர் அடைந்ததும் சீதையைக் காட்டுக்கனுப்பியதற்குக் காரணமாகப் பல ராமாயணங்கள், பலவாறு கூறும். பலவாறு கூறினும் அவற்றின் அடிப்படை சீதையின் கற்பைப் பற்றியதுதான்.

அயோத்தி நகரில் ஒரு வண்ணான் தன் மனையாளுடன் மாறுபட்டுச் சினந்து அவளை வீட்டை விட்டுத் துரத்தினான். பல நாட்களுக்குப் பின்னர் அவளை, அவளது சுற்றத்தார்களும் உடன்பிறந்தார்களும் கூட்டிக்கொண்டு வந்து அவ்வண்ணானை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கேட்டுக் கொண்டனர். அவ்வண்ணான் அவர்களைச் சினந்து நோக்கி, ''பிறருடைய வீட்டிலிருந்தவளை நான் மறுபடியும் தொடுவேனா? ராவணனால் பத்து மாதங்கள் வரையில் தன் அந்தப்புரத்தில் வைக்கப்பட்ட சீதையை மறுபடியும் அழைத்துக்கொண்ட ராமனென்று என்னையும் நினைத்தீர்களோ?'' என்று கூறினான்.

இது ஆனந்த ராமாயணம் (ஜன்ம இயல் 3) காட்டுவதாகும்.

சீதை கைகேயி முதலானவர் கூடியிருந்தனர். அப்போது எல்லோரும் சீதையை இராவணனைப் பற்றியும் அவனது வீரர்களைப்பற்றியும் விபரமாகக் கூறுமாறு கேட்டனர். சீதை எல்லாவற்றையும் விளக்கிக் கூறினாள். அப்போது கைகேயி இராவணன் எப்படியிருப்பான்? அவன் படத்தை வரைந்து காட்டமாட்டாயா? என்று கேட்டாள். அந்தப் படுபாவியின் படத்தையா வரையச் சொல்லுகிறாய் என்று சீதை கேட்கவில்லை. வரையத் தொடங்கினாள் தலையை வரைந்து முடித்தாள். எஞ்சியதும் முடிப்பதற்குள் இராமன் அங்கு வரவே, மற்ற அனைவரும் எழுந்து புறம் போயினர். சீதை தான் வரைந்த படத்தை மெதுவாக இராமனுக்குத் தெரியாமல் கட்டிலுக்குக் கீழே போட்டுவிடுகிறாள். இராமனின் திருவருட் பெருமையால் (ஸந்நிதான விஷேஷம்) அத்தலை உயிர்பெற்றுத் துடிக்கத் தொடங்கியது. அந்த ஓசையைக் கேட்ட இராமன் ''அடி சீதே! உனக்கு இன்னும் அந்த இராவணனின் நினைவு விடவில்லையா? அவனில்லாவிட்டாலும் அவன் உருவத்தையாவது எழுதிக்கொண்டு பார்க்கத் தோன்றிற்றோ? என்முன் நில்லாதே! மறைந்துபோ!'' என்றார்.

ராமனிடம், கைகேயி, ராவணனின் படத்தைக் காட்டி ''மனுஷ்யர்களுக்குப் பிரியமான வஸ்து அடிக்கடி ஞாபகத்திற்கு வரும். ஸ்திரீகளின் மனத்தை அறிந்தவர் யார்'' என்று பொதுவாகவும் குறிப்பாகவும் புலப்படுத்தினாள்.

இவ்வாறு ஆனந்தராமாயணம் காட்டும் சீதையை இராமாயணத்தில் காமுற்றோர் பலர்; மெய் தீண்டினோர் பலர். இந்திரனின் மகன் ஜலந்திரன் சீதாதேவியின் உருக் கவர்ச்சியாலும் உறுப்புக் கவர்ச்சிகளாலும் உந்தப்படுகிறான்—ஓடி வருகிறான். இராமன் சீதையின் மடியில் ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருக்கும்போது ஜலந்திரன் காக உருவெடுத்து என்னென்னவோ திருவிளையாடல்கள் செய்கிறான். விராதன் என்னும் ஒரு பகைவன் இராமன் முதலானோர், காட்டில் திரிந்தபோது சீதையைக் கண்டு மயங்குகிறான். அவளைத் தனக்கு ஆக்கிக்கொள்ளும் மகிழ்ச்சியால் சீதையை எடுத்துத் தன் இடுப்பில் வைத்துக் கொள்ளுகிறான். சௌபாக்கியவதி சீதை நெடுநேரம் விராதனின் இடுப்பிலேயே இருக்கவேண்டியதாயிற்று.

அழகான சீதையைத் தன் அன்பு மனையாளாக ஏற்றுக்கொண்ட ஒரே காரணத்தால் இராமன் பல தொல்லைகளுக்காளாகிறான். பல இடங்களில் போர்புரிய வேண்டியவனாகிறான். சீதையின் திருமணத்தில் அவளை அடைவதற்காக வில்லை வளைத்த இராமன் அவளைக் காப்பாற்றுவதற்காகவும் வில்லை வளைத்தபடியே நிற்கவேண்டியவனானான். விராதகனோடு சீதைக்காகச் சண்டை செய்கிறான். இலங்கையில் இராவணனை எதிர்க்கிறான். ஜலந்திரனைச் சபிக்கிறான். எல்லாம் சீதைக்காகத்தான்.

இராமாயணம் என்பது இராமனின் கதையன்று, அது சீதையின் கதைதான். சீதைதான் ஆணிவேராக இருக்கிறாள். சுருக்கமாகச் சொன்னால் சீதையின் சோகக் கண்ணீரும் சோகக்கதையும் தான் இராமாயணமாக முகிழ்த்திருக்கிறது.

காமவேட்கையால் துடித்த இராவணனிடம் சீதை நெடுநாள் தப்பி வாழ்ந்திருக்க முடியாது எனவே உள்ளத்தால் அவள் மாசற்றவள் என்று கொள்ளினும் உடலால் மாசுபடுத்தப்பட்டவள் என்பதை மறுப்பதற்கில்லை.

தமிழ்ப் பெண்களின் கற்புநிலையையும் பண்பாட்டையும் மனத்துள் கொண்டு சீதையை அணுகினால் சீதை என்ன மறுமொழி கூறுகிறாள் என்று பார்க்கவேண்டும்.

பிற ஆடவரால் காமநோக்கோடு தீண்டப்பெறும் திருமேனி மருவுறாதோ? தேசுலாம் கற்பு மாசுறாதோ? என்று சீதையைக் கேட்டால் சீதை உணர்கிறாள்; ஒத்துக்கொள்கிறாள். அதற்கு அவள் உய்தி தேடிக்கொண்டிருக்கத்தான் வேண்டும் என்பதையும் அவ்வாறு தேடாத காரணத்தால் அவளது பாபம் உலகம் உள்ளளவும் பாபமாகவே தோற்றும் என்பதையும் மனம் ஒப்பி ஏற்றுக் கொள்ளுகிறாள்.

இலங்கைப் போர் முடிந்ததும் இராவணனின் இரத்தச் சேற்றில் இராமன் வெற்றி வாகை சூடிய செய்தியை அனுமன் சீதைக்குச் சொல்லுகிறான். அப்பொழுது அவர்களுக்குள் நிகழ்ந்த உரையாடலில் சீதை,

''இவ்வளவு பிறர்க்கு அறிவுரை, கூறும் நான் பெரிய அபராதி, தவறுடையவள். பதிவிரதை, கற்புக்கரசி என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறேன். அரசகுலத்தில் பிறந்தவள், அரசனை மணந்தவள், பிற ஆடவனை மனதிலும் நினைக்கக் கூடாது. அப்படியிருக்க, இராவணன் என்னைத் தொட்ட காரணத்தாலேயே உயிர் விட வேண்டியது என் தர்மம். அப்படிச் செய்யாமல் இவ்வளவு காலம் நான் உயிரை வைத்துக்கொண்டிருப்பது மகா பாபம். ஆகையால் முதலில் என்னைத் தண்டிக்க வேண்டும்.

{ சருக்கம் 115—யுத்தகாண்டம் வான்மீகி }

இவ்வாறு சீதை ஒத்துக்கொள்ளும் பகுதியைக் கம்பன் பலமுறை படித்திருப்பான். அவன் தலை சுற்றியிருக்கும். சீதாபிராட்டியாரா அபராதி என்று நினைத்தபோது மூளை கிறுகிறுத்திருக்கும். சீதையே ஒப்புக் கொண்டாலும் அதைத் தான் ஒத்துக்கொள்ள முடியாது என்று மறுத்துவிட்டான் கம்பன்.

இராவணன் சீதையைத் தொட்டான், தூக்கினான் என வரும் பகுதியை மறைத்துவிட்டால் இவ்வளவு தொல்லைகள் இருக்காதே என்று நினைத்தான். சுவடெழுப்பி மறைத்து விட்டான்.

இராவணனை வென்றதும் சீதையை மீட்டுக்கொண்டு இராமன் அயோத்தி சென்றான் என்று கதையை வான்மீகி நடத்திக்கொண்டு சென்றிருந்தால் இந்தப் பிரச்சினைக்கே இடமில்லாது போயிருக்கலாம். கம்பன்மட்டும் மூலக்கதையாசிரியனாக இருந்தால் அம்மா திரித்தான செய்திருப்பான். அந்தத் துர்பாக்கியம் நிகழவில்லை. வான்மீகி இந்த ஐயப்பாட்டைப் பல இடங்களிலும் எழுப்பிக் காட்டுகிறார். வான்மீகி இதை விட்டுச் சென்றிருந்தால் அவரைக் கேட்பார் எவரும் இலர். ஏன் எனில் அவரே மூலக்கதை ஆசிரியர். வாசகர்கள் தப்பித் தவறி எழுப்பினாலும் பொல்லாத 'இராமபக்தர்கள்' சும்மா விடமாட்டார்கள்.

நல்லவேளை! வான்மீகியே இந்தப் பிரச்சினையை ஆரம்பித்து வைத்துவிட்டதால் நாம் எல்லாம் தப்பிப் பிழைத்திருக்கிறோம், சீதையின் மேல் உள்ள பற்றிற்காக அப்பகுதியை மறைத்தால் கலைநேர்மை குன்றிவிடுவதை வான்மீகி உணர்ந்தார். காவியகர்த்தாவின் நிறை புலமைக்கு அவர் எடுத்துக் காட்டியவை அரண் செய்கின்றன. எடுத்துக் காட்டாது விடுத்திருப்பின் காவியத்திற்கும் குறைபாடாக முடிந்திருக்கும்.

கலைநேர்மை பெரும்பாலும் உடையவராகவே காணப்படும் வான்மீகி இக்கேள்விகளுக்கு அங்கங்கே சமாதானமும் சொல்ல முயல்கிறார் ஆனால் அவரது அமைதி வலியிழந்து நெகிழ்கின்றன. மனித எல்லைக்குள் தோன்றும் ஐயப்பாட்டைத் தெய்வங்களைக் கூட்டிவந்து தீர்த்து வைக்க வேண்டியிருக்கிறது. சூரியன், சந்திரன், மகேந்திரன்வருகிறார்கள். ஆனால் உலகத்தாருக்கு அவர்கள் தெளிவுபடுத்தவில்லை.

★

இதுவரை ஒருவாறு சீதாதேவியாரின் கற்பைப்பற்றி கூறினேன் சீதை உடலால் மாசு பெற்றிருக்கலாம் எனத் துணிந்தேன். கம்பன் வான்மீகியினின்று மாறுபட்ட இடங்களையும், அவ்வாறு மாறுபட்டுப் புனைந்த புனைவுரைகளையும் அதனால் அவன் காத்த கற்பையும் காட்டினேன்.

''எனப்பா இப்படி ஒரு அவலமான ஆராய்ச்சியில் உன் உள்ளத்தைச் செல்லவிட்டாய்'' என்று நீங்கள் கேட்கின்றீர்களா? அதைக் குறையென்று கருதுவீர்களானால் அந்தக் குற்றத்தை இராமன்மேல் சுமத்துங்கள்; அயோத்தி மக்கள் மீது சுமத்துங்கள்; வான்மீகியின் மீது ஏற்றுங்கள்.

இராமனிடம் பிறந்த சந்தேகம், அயோத்தி மக்களால் தாலாட்டப்பட்டது. என்போன்றவர்களால் பாராட்டப்படுகிறது. அவ்வளவுதான்.

எனக்குமட்டும் இது பெரும் பிரச்சினையன்று. இது கம்பனுக்கும் மலைபோன்ற பிரச்சினை. இராமாயணத்தின் உயிர்நாடியான விஷயமும் இதுதான். ஒருத்தியின் கற்பைக் கெடுக்கப் பலபேர் முயன்றதும் ஒரு இராமன் அதைக் காக்க முற்பட்டதும் தானே இராமாயணம்? தர்மத்தை நிலைநிறுத்தப் போன இராமனையே அதர்மம் அலைக்கழிக்கிறது, ஆட்டிவைக்கிறது!

★

குறிப்பு. இதற்கு ஆதாரமாக இருந்த நூல்கள்: ராமாயண தத்வார்த்த தீபிகை, ராமாயண மொழிபெயர்ப்பு, திரிகோணமலை கனகசபாபதி பிள்ளை. C. R. சீனிவாச சாஸ்திரி B.A.

★

17. மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

வெண்பாப் போட்டி 17ன் பரிசுபெற்ற வெண்பாவையும் ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் சென்ற இதழில் வெளியிட்டோம். இந்த இதழில், மேலும் சில தகுதியுடைய வெண்பாக்களை வெளியிட்டுள்ளோம்.

காட்டுக் குழைப்போரை நற்றமிழைக் காப்போரை
வீட்டுப் புகழ்காக்கும் வேல்விழியை--ஊட்டுமதி
செய்புலவன் ஏடுகளை சிங்காரச் சேய்களினை
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—ந. ஜாபர், தேவத்தூர்.

★

ஆய்ந்துணர்ந்த கொள்கை அரண்காக்க அன்பேநான்
சாய்ந்துவிழு மட்டும் சமர்செய்வேன்--பாய்ந்திட்டி
கொய்திடிலோ என்னுயிரைக் கொள்கைக்காய்ச் [சாவினையும்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—இரா. அப்பாதுரை, மேலப்பத்தை.

★

சிங்களத்தைத் தங்கமதாய்ச் செப்பணிட்ட சீராளர்
தங்குதற்கோ இடமில்லை தவிக்கின்றார்--அங்கவர்தான்
வாய்த்தயிட மின்றித்தாய் நாடுவந் திட்டாலநான்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—இறைமுதல்வன், சின்னமுதலைப்பட்டி.

★

பாங்கியவள் சொற்கேட்டுப் பாவிகரம் பற்றிநான்
ஏங்குகிறேன் என்சொல்வேன் எந்தவிதம்--ஆங்கவர்போற்
கொய்யு மலர்சூடிக் கோவை இதழ்பருக
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—அழ. சுப்பிரமணியன், ஆவினிப்பட்டி.

★

கன்னித் தமிழ்நாட்டின் காவலரே அத்தான்நம்
அன்னைத் திருவிடத்தை ஆட்டிவைக்கும்--சின்னவரைக்
கொய்து தலையதனைக் கொண்டுவந்தா லுமைநான்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—முருகு, வரகூர்.

★

பெற்ற தாய்நாட்டைப் பின்வந்தார் ஆள்வதுவோ
உற்றுணர்நீ ஒண்தமிழா ஒற்றுமைகொள்--மற்றவர்மேல்
செய்போரில் சேர்ந்திட்ட செஞ்சொலைக் கேட்டவுடன்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—முருகதாசன், சென்னை-12.

★

கல்விகற்கப் போயினவென் காதலரைக் காணுமற்
பல்விதத்தா லுங்கவலைப் பட்டிருந்தேன்--நல்விதத்திற்
கைசலிக்கா மற்கொடுக்குங் காதலர்வந் தாரினியான்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—க. மா. முத்துச்சாமிப்புலவர், அருப்புக்கோட்டை.

★

ஆலை முடிந்தது அத்தானும் வந்திட்டார்
மாலை மறைந்தொழிதல் எப்போது?--சோலையில்
செய்திட்ட காதல் செழித்திடவே அன்பரொடு
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

★

துன்பம் துடைக்கத் துணைநின்று என்றென்றும்
இன்பம் அளித்திடுவீ ரென்னுயிரே!--துன்பமென்
மெய்யைத் துளைக்குமுன் மஞ்சத்தை உமதினைவால்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—ஏ. சிவா, வேலூர்.

செல்வர் உலகும் தீண்டாமைப் பேயுலகும்
செல்லும் இடமெல்லாம் கொல்லுதே--நல்லின்பம்
பெய்தே அணைக்கும் பேரின்பச் சாவே, வா!
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—சு. ரங்கநாதன், வேலூர்.

★

பான்மதியின் தண்ணொளியில், பைந்தமிழர் வீரமதில்
தேனொழுகும் தித்திக்கும் தீந்தமிழில்--வான் அளவு
மெய்க்காதல் கொண்டொழுகும் மென்மலராள் [இன்மொழியில்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

கி. கண்ணன், அக்ரப்பேட்டை

★

வையத்தில் தண்டமிழை வாழ்வினைக்கண் புத்துணர்வை
ஐயத்தைப் போக்கிவிடும் ஒளிநிவை செய்யநல்
மெய்ப்பொருளைத் தன்னுயிராகக் கொள்ளுமுயர் [நற்குழுவில்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—அ. மு. நாகரத்தினம், அந்தியூர்.

★

மன்ற லமர்ந்தன்று மாலையிட்டு மாதமொன்றாய்
சென்றுமுகங் காணுமற் சேணிருந்தேன் இன்றேபோய்
மையார் குவளைக்கண் மங்கையின்றோள் நண்பாஎன்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—க. வீ. வரதன், சென்னை-23

★

கொல்லாதே உன்விழியால் கோமளமே என்னுயிரும்
நில்லாதே நீயென்னை நீங்கிவிட்டால்--உள்ளாயோ?
கொய்யா மரத்தடியில் கோதையே நானுன்னை
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—'தேனருவி', காசாநகர்.

★

செங்குருதி பொங்கியெழச் சிங்கமெனச் செங்களத்தில்
பங்கமிலா வாளெடுத்துப் போரிட்டு--மங்காத
செய்யதமிழ் நாடெய்தச் சாவெனக்கு நேருமெனின்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—கே. எஸ். மாணிக்கம், சிவகங்கை.

★

கொஞ்சிக் குமிழ்சிரிப்புக் கூட்டிக்கொவ் வையிதழால்
விஞ்சு சுவையமுது தந்தென்னை--பஞ்சணையில்
மெய்யன்பே கொய்தணைப்பீர் என்றழைத்த காதலியை
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—சமா. தமிழ்ச்செல்வன், தாசர்புரம்.

★

சாதி பிரித்தாலென்? சங்கடங்கள் சூழ்ந்தாலென்?
நீதியிலார் நம்மை எதிர்த்தாலென?--தீதில்லாய்!
மெய்க்காதல் உள்ளதுவால் மேவியுனைக் கைப்பிடித்து
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—அ. கலியபெருமாள், குடந்தை.

★

வாளும் வலிமாவும் வார்த்தெடுத்த வேற்படையும்
சூளும் எனப்பயின்ற செந்தமிழர்--தோளுயர்த்தி
செய்வார் விடுதலைப்போர்! சென்றவ் வறப்போரில்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—அன்புரையன், அம்மையப்பன்.

★

கடமை இசைந்திடக் காதல் மறுக்க
மடமொழி யுள்ளமும் வாட--நெடுநாட்கே
பொய்யாதீர் என்றுரைத்த பூவையை இன்றுசென்றே
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—ஆ. அழகன், புதுச்சேரி.

★

நினைத்தவுடன் இன்பூட்டி நீள்விழியால் கண்டவுடன்
பனையளவு நோய்செய்யும் பாவை--எனைக்கண்டு
வாய்திறந்தே தேன்குரலால் வாவென்பாள்; [சென்றிடுவேன்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—நா. இராவணதாசன், சென்னை-30.

★

வஞ்சகரின் நெஞ்சமுறு நஞ்சுதொலை வெஞ்சமரில்
கொஞ்சிவரும் கொஞ்சமிலாச் செஞ்சரங்கள்-அஞ்சுகிலேன்
ஐயரிகொள அம்புவிழிக் கஞ்சியநான் வஞ்சியுனை
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—பொன்னிவளவன், பாவநாசம்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். எ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.